

# டாக்டர்.எம்.ஜி.ஆர்

# வீர காவியம்



# டாக்டர் எம். ஜி. ஆர்.
# வீர காவியம்



எழுதியவர்

ஜெயா பொன்முடி

வெளியீடு 1988

**விலை ரூ. 3**

ஸ்ரீ லக்ஷ்மி பிரசுரம்
59, கச்சேரி சாலை
மயிலை ! சென்னை 600 004.

---

அச்சிட்டோர்
எஸ். பி. எம். பைன் ஆர்ட் பிரிண்டர்ஸ் சென்னை-5

# டாக்டர் எம். ஜி. ஆர்.
# வீரகாவியம்

டிசம்பர் 1987 இருபத்திநான்காம் நாள் காலை!
டிசம்பர் 24!
மறுநாள் உலகமேய்ப்பர் கிறிஸ்து நாதர் பிறந்த
தினம்—
கோலாகலமான கிறிஸ்துமஸ் திருவிழா!
நாடே களிப்படைந்து கொண்டுஅந்த நாளைச்சந்திக்கக்
காத்துக் கொண்டிருக்கும் கர்த்தர் பிறப்பு வைபவம்!
ஆனல்...
ஒருநாள் முன்னதாக...24 நாள் அதிகாலையில்
வாடிக்கையாக எழும் விடிவெள்ளி
முளைக்க மறந்து விட்டது.
கீழ்வானம் சிவக்கவில்லை!
முழு சந்திரன் அன்று உதிக்காமலேயே இருந்து விட்டது
இனி அந்த சந்திரன்...
மக்களின் இறைவனான அந்த சந்திரன் பவனி
வராது...
யாருமே பார்க்கமுடியாது.
மக்களை அழவைத்து விட்டு அந்த சந்திரன் நிரந்தர
மாகவே விடைபெற்றுச் சென்று விட்டது.
ஆம்...
வழக்கம் போல்தான் அன்று வியாழக்கிழமை
உதயமாகியது-
சாதாரணமாக அல்ல...

ஒவ்வொருவரின் நெஞ்சத்திலும் விழுந்தச் சம்மட்டி
அடியாக...
யாரால் இது எப்படி நம்ப முடியும்!
எம். ஜி. ஆர் காலமாகி விட்டார் என்ற அதிர்ச்சி—
யான செய்திதான்!
அதிகாலை மூன்று மணிக்கு எம்- ஜி- ஆர்
அமரர் ஆகிவிட்டார்.
எப்படி நம்புவது?
மக்கள் தூங்கிக் கொண்டிருக்கும் நேரத்திலேயா
அவர் தூங்குவார்?

இரவில் எவ்வளவு நேரம்தாமதித்து உறங்கச் சென்றாலும் அதிகாலையிலேயே எழுந்து சுறுசுறுப்பான தேனியாகவே செயல் படும் அவரா இயற்கை எய்தினார்?

அது எப்படி முடியும்?

பொய்யான செய்தி என்றே பரபரப்பு அடைந்தேன். நம்பமுடியவில்லை.

பயங்கரமான கெட்ட கனவு என்றே நினைத்தேன். எம். ஜி. ஆர் நோய் தாக்கியவர்தான் என்ற போதிலும் உடல் ஆரோக்கியத்தில் உலகமே வியக்கும் வண்ணமே இருந்தார்.

அவர் திடீர் என்று மறைவது என்றால் அது நடக்க முடியாத காரியம்!

அண்மைக் காலங்களில் அவர் தீவிரமான உடல் உழைப்புக்கு இடம் கொடுத்தார்கள். மருத்துவர்கள் நன்கு ஓய்வு எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்ட போதிலும் அவர் உடம்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. உயிருக்கும் முக்கியத் துவம் கொடுக்க வில்லை.

உயிர் ஒரு தடவை தானே போகும்! அந்த உயிர் நாட்டு மக்களின் நலன் காக்க போகட்டும் என்று எண்ணியே செயல்பட்டார்.

மாலைகள் அணியக்கூட கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. மீறினார்—

மக்கள் மகிழ்வுக்காக அவற்றையும் ஏற்றுக் கொண்டார்.

நீண்ட நேரம் கண்விழித்தார். அல்லும் பகலும் மக்களின் வளமான வாழ்க்கைக்குப் பாடுபட்டு தன்னையே வருத்திக் கொண்டார்.

இலங்கையில் பாராண்ட இனமான தமிழ் இனம் கடுமையான கொடுமைகளை அனுபவித்தது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் மாண்டு கொண்டிருந்தனர்.

அவர்கள் நல்வாழ்வு பெற தன்னையே போராட்ட களமாக மாற்றிக் கொண்டார்.

பாரத பிரதமர்ராஜீவ்காந்தியுடன் இணைந்து முப்பது வயது இளைஞர் போல் பாடுபட்டார்.

இலங்கை தமிழர்களுக்கும் பாதுகாப்பு ஏற்படவும்...

அங்கே தமிழ் மாநிலம் அமையவும் வழிகண்டார்.

ஆகஸ்ட் இரண்டாம் தேதி இலங்கையுடன் ஒப்பந்தம் செய்வதைப் பாராட்டி பிரதமர் ராஜீவ் காந்திக்கு சென்னை கடற்கரையில் பாராட்டு விழா நடந்தது.

அப்போது உடல் நலம் தளர்ந்திருந்த போதிலும் எம். ஜி. ஆர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஆகஸ்ட் 5ல் மருத்துவ பரிசோதனைக்காக அமெரிக்கா புறப்பட்டுப் போனார்.

பின்பு அக்டோபர் 31 ஆம் தேதி அமெரிக்காவிலிருந்து பூரண உடல் நலத்தோடு சென்னை திரும்பினார்.

மக்கள் அவரது தோற்றத்தைக்கண்டு வியந்தார்கள். முன்னை விடவும் முழு ஆரோக்கியத்துடன் துடிப்பான இளைஞன் போல் திகழ்ந்ததைக்கண்டு ஆச்சரியமானார்கள்.

தமிழகம் வந்தபிறகு அவர் இதுவரை இல்லாத வேகத்துடன் செயல்பட ஆரம்பித்தார்.

ஏராளமான பொதுநிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். நவம்பர் 25ல் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு தொடர் பாக வன்னியர் முதல் ஒவ்வொரு சாதிசங்க தலைவர் களையும் பிரதிநிதிகளையும் சந்தித்துப்பேசி அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார்.

அவற்றைப் போக்கி நிரந்தரமான தீர்வு காணவும் முயன்றார்.

தொடர்ந்து...

இலங்கையில் அமைதி ஏற்படவேண்டும் என்பதற்காக உழைத்தார்.

ஈழமக்களின் துயரம் கண்டு கலங்கினார்.

டிசம்பர் 21-ஆம் நாள்!

அவரது இடைவிடாத முயற்சிகளின் விளைவாக சென்னை மீனம்பாக்கத்தில் நேருஜியின் முழு உருவச் சிலைஅமைக்கப்பட்டது.

சிலை திறப்பு விழாவில்...

பிரதமர் ராஜீவ்காந்தியுடன் எம். ஜி. ஆரும் கலந்து கொண்டு அந்த நிகழ்ச்சியில் உணர்ச்சி வசப்பட்டு உரையாற்றி...

மறுநாள் விமான நிலையம் சென்று பிரதமரையும் வழியனுப்பி வைத்தார்.

அப்பொழுது அவரைப் பார்த்தவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து மக்கள் சேவையைத் தொடருவார் என்று நம்பினார்கள். எதிர்பார்த் தார்கள்.

அவரது கம்பீரமான தோற்றமும்......செயல் வேகமும் ...... காட்டி வந்தச் சுறுசுறுப்பும் அத்தகைய எதிர் பார்ப்பை ஏற்படுத்தின.

ஆனால்...

அவர் எல்லோரையும் அழ வைத்து விட்டு அமைதி யாக துயில் கொண்டு விட்டார்.

நோய் வாய்ப்பட்டு படுத்தப் படுக்கையாக இருந்தால் எல்லா மதத்தினரும் பிரார்த்தனை செய்து பிழைக்க வைத்து விடுகிறார்கள் என்று எண்ணி மக்கள் தூங்குகிற நேரம் பார்த்து அதிகாலை மூன்று மணிக்கு இறைவன் அவரை தன்னுடன் அழைத்துச் சென்று விட்டாரா?

எம். ஜி. ஆர் முக்காலமும் அறிந்த மகான்-அவருடைய மரண நேரம் அவருக்கே தெரிந்திருக்கிறது.

அதனால் தான் அமெரிக்கா சென்று வந்த பின்பு இது வரையிலும் இல்லாத சுறு சுறுப்போடு செயல் வேகம் காட்டினார்.

மக்களுடன் வாழ்ந்தார்.

அவர்களது சுக துக்கங்களில் இரண்டறக் கலந்தார்

இப்பொழுது தெய்வமாகி விட்டார்.

அன்று...

அந்த டிசம்பர் 24...

கருப்பு நாள்...

துயர நாள்...

அன்று...

அவர் இறந்து விட்டார் என்ற செய்தி வானொலியில் அறிவித்து உறுதி செய்யப் பட்டதும் உயிரினங்கள் ஒரு கணம் சுவாசிக்க மறந்து விட்டன.

காற்று வீச மறந்து விட்டது.

அலைகள் நின்று விட்டன.

பூமியின் இயக்கமே நின்று விட்டது போன்ற பரபரப்பு...

நம்ப முடியவில்லை.

ஆனால் வானொலி சோககீதம் இசைத்த பின்பு நம்பாமல் வேறு வழியில்லையே!

அவர் காலமாகி விட்டார் என்பது நிஜம்—

அதன் பிறகு...

மக்கள் இயங்குவதே நின்று விட்டது.

கடைகள் திறக்கப்படவே இல்லை.

கார்கள்... பஸ்கள் ஓடவே இல்லை.

எங்கும் பரபரப்பு...
மக்களிடையே வெறி...

வெறி...

தலைவனை இழந்து விட்ட அதிர்ச்சியினால் என்ன செய்வது என்று தோன்றாத வெறித்தனம்...

அழுதார்கள்...

அரற்றினார்கள்—

புலம்பினார்கள்...

மௌனமாக கண்ணீரைக் காட்டாமல் நெஞ்சுக்குள் குமுறி அழுதவர்களும் ஏராளம்.

எப்படியோ...

தமிழகத்தில் நடக்கவே கூடாத ஒரு சோகம் நடந்து விட்டது.

அள்ளிக் கொடுத்த வள்ளல்......

தன் சொத்துக்களையும் மக்களுக்கே தந்த வள்ளல்...
இலங்கைத் தமிழர்களுக்கு 4 கோடி ரூபாய் தந்து உதவிய அந்த இறைவன்...

ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே என்று அழைத்து மகிழும் அந்த மாபெரும் தலைவன்...

இன்று நமது ரத்தத்தில் அவரை இரண்டறக் கலக்கம் செய்து விட்டு தெய்வமாகி விட்டார்.

அந்தத் தெய்வத்தின்...
வாழ்க்கை ஒரு வீர காவியம்...


















# டாக்டர் எம். ஜி. ஆர். வீர காவியம்

தமிழ்த் தாயின் தவப்புதல்வர்—தமிழர் தம் இதயக் கோவிலில் வீற்றிருப்பவர்—எம். ஜி. ஆர் என்னும் மூன்றெழுத்து மந்திரத்தின் சொந்தக்காரரர்—இப்பூவுலகில் அவதரித்தது 1917-ம் ஆண்டாகும்.

அந்த ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் தேதி இலங்கையிலுள்ள கண்டி என்னும் நகரத்தில் நம் பொன்மனச் செம்மல் அவதரித்தார்.

தமிழ் பஞ்சாங்க முறைப்படி பார்த்தால் கலியுகாதி 5018 கொல்லம் ஆண்டு 1093, நளவருடம், தை மாதம் நான்காம் தேதி, புதன்கிழமை நவமி திதியும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் காலை சுமார் எட்டு மணியளவில் தமிழகத்தின் தலைமகனாகத் திகழும் எம். ஜி. ஆர் பிறந்தார்.

அவர் தந்தையாரின் பெயர் கோபாலமேனன் என்பதாகும். அவருடைய சொந்த ஊர் கேரள மாநிலத்திலுள்ள மருதூர். மருதூர் கோபாலமேனன் (மைந்தன்) ராமச்சந்திரன் என்பதின் சுருக்கமே எம். ஜி ஆர். என்பதாகும்.

அவருடைய தாயாரின் பெயர் பாமா. சத்யவாக்கைத் தவறாதவர் என்பதால் மற்ற பெண்களால் அவர் சத்யபாமா என்றழைக்கப்பட்டார். அது நாளடைவில் சத்யாவாகச் சுருங்கி 'அன்னை சத்யா' வாகப் புகழ் பெற்று விட்டது.

கோபாலமேனன்—சத்யபாமா தம்பதியருக்கு நம் பொன்மனச் செம்மல் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார். எண் கணித ஜோதிடப்படி 'ஐந்து" என்ற எண்ணிற்கு ஒரு விசேஷத் தன்மை உண்டு. எல்லாரையும் வசீகரிக்கும் சக்தி ஐந்து என்ற எண்ணிற்கு உண்டு என்று எண்கணித ஜோதிடத்தில் வல்லவர்களாக விளங்குபவர்கள் சொல்வார்கள்.

நம் எம். ஜி. ஆரைப் பொறுத்தவரை அது முற்றிலும் சரி. ஐந்தாவது கடைக்குட்டியாகப் பிறந்த அவர், தம்முடைய எதிரிகளையும் வசீகரிக்கும் தன்மைபெற்றிருக்கிறார்.

பொன்மனச் செம்மலின் தந்தையார் கேரள மாநிலத்தைச் சேர்ந்த மலேயாளி எனக் கருதப்பட்டாலும் பூர்வீக ரீதியாகப் பார்க்கும்போது அவர் தமிழர்தான்.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த காங்கேயர் பகுதியில் மன்றாடியார் என்னும் இனத்தவர் வாழ்ந்து வருகிறார்கள். நம் புரட்சித் தலைவரின் முன்னோர்கள் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களே. அவர்கள் பிழைப்பிற்காக கேரள மாநிலத்திலுள்ள மருதூரில் வந்து குடியேறினார்கள். அவ்வாறு வந்தவர்கள் மேனன் என்று அழைக்கப் பட்டார்கள்.

மருதூரில் புரட்சித் தலைவரின் தந்தையார் ஒரு நீதிபதி யாகப் பணியாற்றி வந்தார். அப்போது அவர் செல்வச் சீமானாக இருந்தார். நீதியும், நேர்மையும், நியாயமும் மனிதாபிமானமும் நிறைந்த தீர்ப்புகளை வழங்கிப் பெரும் புகழ் பெற்றிருந்தார்.

ஆனால் ஒரு சமயம் நீதிக்குப் புறம்பான தீர்ப்பை அளிக்கும்படி அவர் கட்டாயப் படுத்தப் பட்டார். அதற்கு அவருடைய மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. அதனால் அவர் தம்முடைய வேலையை ராஜினமா செய்து விட்டார்! நீதிமன்ற வரலாற்றில் அது பொன்னெழுத்துக்களில் பொறிக்கப் படவேண்டிய நிகழ்ச்சியாகும்.

அதன் பிறகு கோபாலமேனனுக்கு மருதூரில் இருக்கப் பிடிக்கவில்லை. இலங்கையிலுள்ள கண்டி நகருக்குப் பயண மானார். அங்கு ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணி யாற்றலானார். அத்துடன் நீதிபதி பதவியும் அவருக்குக் கிடைத்தது.

அங்கும் அவருடைய நியாயமான தீர்ப்புகள் பெரும் புகழைத் தேடிக் கொடுத்தன. அவரைக் கௌரவிக்கும் வகையில் கண்டி நகரிலுள்ள ஒரு தெருவிற்கு 'மருதூர் கோபாலன் தெரு' என்று பெயர் சூட்டப்பட்டது.

அவருடைய குடும்பம் செல்வச் செழிப்பில் மிதந்தது. பங்களா போன்ற வீடு, ஏராளமான நில புலன்கள், தோப்புகள் முதலானவற்றிற்கு பொன்மனச் செம்மலின் தந்தையார் சொந்தக் காரராக இருந்தார். அதனால் அவருடைய வீடு முழுவதும் நெல், அரிசி மூட்டைகளும் தேங்காய்களும் குவிந்து

கிடக்குமாம். அப்படிப்பட்ட செழிப்பான சமயத்தில் தான் எம். ஜி ஆர் பிறந்தார்.

அவருக்கு முன்னால் கோபாலன்—சத்யபாமா தம்பதியருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்திருந்தன. அதாவது எம். ஜி. ஆருக்கு இரண்டு அண்ணன்களும் இரண்டு தமக்கையரும் இருந்தார்கள்.

சோதனை என்பது எல்லாருடைய வாழ்க்கையிலும் ஏற்படக் கூடியது தான். ஆனால் அந்தக் குடும்பத்தைப் பொறுத்த வரை அது குபீரென்று பெரும் சூறுவளியாக வீசிவிட்டது.

தமிழக மக்களின் துயர்களைத் துடைக்கும் வள்ளலை ஈன்றெடுத்த அன்னை சத்யாவிற்குத் தான் எத்தனை பேரிடிகள்! வசந்தமான வாழ்வில் தான் எத்தனை சோதனைகள்!

புரட்சித் தலைவருக்கு இரண்டரை வயது பூர்த்தியாவதற்குள் அவருடைய தந்தையார் கோபால மேனன், ஒரு சகோதரர், இரண்டு சகோதரிகள் ஆகியோர் அடுத்தடுத்து காலமானார்கள்!

குதூகலம் பொங்கிக் குதித்த அந்தக் குடும்பத்தில் திடீரென்று சோகம் சூழ்ந்தது. சுகமான வாழ்வில் அமைதியாக மூழ்கியிருந்த அன்னை சத்யா பெரும் துயரக் கடலில் மூழ்கினார். அந்தக் குடும்பத்தில் அவரும் அண்ணன் சக்ரபாணியும் எம். ஜி. ஆரும் மட்டுமே மிஞ்சினார்கள்.

அந்தக் குடும்பத்தைக் கொடுமையான மரணம் மட்டும் நிகழவில்லை. அதைத் தொடர்ந்து நிலவிய சூழ்நிலையும் பெரிதும் பாதித்து விட்டது. நிலமும் தோட்டங்களும் அடுத்தடுத்து விற்கப்பட்டன.

கணவனையும், மூன்று குழந்தைகளையும், சொத்து சுகத்தையும் இழந்து விட்டு இரு குழந்தைகளுடன் அபலைப் பெண்ணாக, அனாதையாக நின்றார் அன்னை சத்யா.

அந்த பூகம்பத் துயரங்களுக்கு மேல் அந்நாட்டில் இருக்க அவருக்குப் பிடிக்கவில்லை. தாய் நாட்டிற்குத் திரும்பிவிடத் தீர்மானித்தார்.

ஆனால் மருதூருக்குச் செல்ல அவர் விரும்பவில்லை. அங்கு கோலாகலமாக ஒரு சீமாட்டி போல் வாழ்ந்த அவர், கணவரையும், மூன்று குழந்தைகளையும், செல்வத்தையும் இழந்து பரிதாபத்திற்குரிய நிலைக்கு வந்திருந்தார். அந்த நிலையில்...

மீண்டும் மருதூருக்குச் செல்ல அவருக்கு எப்படி மனம் வரும்?

சரி. வேறு எங்கு செல்வது?

அந்த சமயத்தில் கும்பகோணத்தில் அவருடைய சகோதரர் நாராயணன் நாயர் இருந்தார். அவர் சிறு வயதிலேயே கேரளத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து விட்டவர்.

கும்பகோணத்தில் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி என்னும் நாடக கம்பெனி இருந்தது. அதில் அவர் பின்பாட்டு பாடும் பாடகராக இருந்து வந்தார்.

அத்துடன் வேலு நாயர் என்பவர் அன்னை சத்யாவின் குடும்பத்திற்கு நெருங்கிய நண்பராக விளங்கியவர். அவரும் அப்போதும் கும்பகோணத்தில் தான் இருந்தார்.

இருவருடைய ஆதரவும் கிடைக்கும் என்பதால் சத்யா தம்மிரு குழந்தைகளுடன் கும்பகோணத்திற்குச் செல்வ தென்று முடிவு செய்தார்.

கணவனையும் மூன்று குழந்தைகளையும் செல்வத்தையும் இழந்த நிலையிலும் அந்தத் துணிச்சலான பெண்மணி சோர்ந்து போய்விடவில்லை. மனம் துவண்டு விடவில்லை. நம்பிக்கையை இழந்து விடவில்லை.

எஞ்சியிருக்கும் இரு குழந்தைகளையும் எப்படியாவது நன்கு வளர்த்து அவர்கள் மூலம் இழந்த செல்வத்தையும் அந்தஸ்தையும் மீண்டும் பெற்று விட வேண்டுமென்ற வைராக்கியம் அவரிடம் இருந்தது.

அவர் கையிலிருந்த சில நகைகளையும் விற்றுப் பணமாக்கிக் கொண்டு இரு குழந்தைகளுடன் கப்பல் ஏறினார். கும்பகோணத்திற்கு வந்து சேர்ந்தார்.

**அது 1920-ம் ஆண்டின் கடைசியாகும். முதன் முதலாகத் தமிழகத்திற்கு வந்த எம். ஜி. ஆருக்கு அப்போது**

வயது மூன்று. அவர் சகோதரர் சக்ரபாணிக்கு வயது ஏழு.

நாராயணன் நாயரின் இல்லம் கும்பகோணத்தில் ஆனையடிப் பகுதி என்னுமிடத்தில் இருந்தது. அங்கு மூவரும் தங்கிக் கொண்டார்கள். அந்தப் பகுதியிலுள்ள பள்ளியில் எம். ஜி. ஆரும் அவருடைய தமையன் சக்ரபாணியும் சேர்க்கப்பட்டார்கள்.

அன்னை சத்யா தெய்வ பக்தி நிறைந்தவர். கருணையும் அன்பும் கொண்டவர். சத்தியமே எப்போதும் வெல்லும் என்பதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. இரு குழந்தைகளும் வாழ்வின் உன்னத நிலையை அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டார். அதற்கு ஒழுக்கமும் 'நேர்மையும்' சத்தியமும் மிக மிக அவசியம் அவ்வகையில் அவர் தம் குழந்தைகளை மிகக் கண்டிப்புடன் வளர்த்து வரலானார்.

குழந்தைகள் பள்ளிக்குச் சென்று திரும்பி வந்ததும் அவர்கள் வயிறு நிறைய உணவு படைப்பார். பிறகு பாடங்களைச் சொல்லிக் கொடுப்பார்.

அவர் அத்துடன் நின்று விடவில்லை. நீதியையும் நேர்மையையும் நற்பண்புகளையும் விளக்கும் அருமையான கதைகளையும் கூறி அப்பிஞ்சு உள்ளங்களில் பதியவைப்பார்,

அன்னை சத்யா வறுமையுடன் பெரும் போராட்டத்தை நடத்திக்கொண்டே தம்மிரு குழந்தைகளையும் மிகவும் அன்பாக வளர்த்து வந்தார். அவர்களிருவரும் நன்றாகப் படித்து முன்னேற வேண்டும். அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை ஒளிமயமானதாக இருக்கவேண்டும் என்பதில் அவருக்கு எல்லை கடந்த ஆசை இருந்தது.

பெரியவர் சக்ரபாணியைப் பொறுத்த வரை அன்னைக்கு எவ்விதத் தொல்லையும் கொடுத்ததில்லை. தான் உண்டு. தன் படிப்பு உண்டு என்று மிகவும் அடக்கமாக இருந்து வந்தார்.

ஆனால் எம். ஜி. ஆர். அவ்வாறு இருக்க வில்லை. செல்லமாக வளர்ந்த பிள்ளை அல்லவா? அதனால் குறும்புத் தனமும் முரட்டுத் தனமும் அவரிடம் நிறைந்திருந்தன.

காலையில் எழுந்ததிலிருந்தே தகராறு ஆரம்பமாகி விடும். பல் துலக்குவது, குளிப்பது, தலைவாரிக் கொள்வது

இவற்றையெல்லாம் தாமாகச் செய்து கொள்ள மாட்டார் அன்னைதான் செய்து விடவேண்டுமென்று அடம் பிடிப்பார்.

அன்னை பல் துலக்கிவிட வந்தாலோ தலையை இப்படியும் அப்படியும் ஆட்டிக் குறும்புத்தனம் செய்வார். அப்போது அன்னை அவருடைய தலை முடியை எட்டிப் பிடித்துக் கொண்டு, ''முடிகாலா... ஏன்டா இவ்வாறு தொல்லை படுத்துகிறாய்? என்று செல்லமாக கோபித்தவாறு அவருக்குப் பல் துலக்கிவிட்டு, குளிப்பாட்டி தலைவாரி விடுவாராம்.

முடிகாலன் என்றால் முடியைப்பறித்த காலன் என்று பொருள் முடிபோன்ற (மகுடம் போன்ற) தந்தையையும் சொத்துக்களையும் கவர்ந்த காலன் என்று அர்த்தம்.

வீட்டில் ஒரு குழந்தை பிறந்த பிறகு நல்ல காரியம் நடந்தாலும் தீமையான காரியம் நடந்தாலும் அதற்கு அக்குழந்தைதான் காரணம் என்று கருதுவது நம் பெண்களின் வழக்கம்.

அப்படித்தான் எம். ஜி. ஆர் பிறந்த பிறகு வீட்டின் தலைவரையும் சொத்து சுகங்களையும் இழந்ததற்கு அவர் தான் காரணமென்று அன்னை சத்தியா கருதினார். அதனால் தான் பொன்மனச் செம்மல் குறும்பும் பிடிவாதமும் செய்யும் போதெல்லாம் அவரை 'முடிகாலா' என்று அழைத்தார்.

ஆனால் அவர் அவ்வாறு அழைத்தாலும் அவருடைய பாசம் முழுவதும் எம். ஜி. ஆரின் மீதே இருந்தது. அவருக்கு இளைய மகன் மீதுதான் கொள்ளைப் பாசம். அவருக்குப் பல் துலக்கிவிட்டு, குளிப்பாட்டி, தலைவாரிப் பொட்டிட்டு பூ வைத்து விடுவதில் அந்தத் தாய் தனி இன்பம் கண்டு வந்தார்.

பொன்மனச்செம்மல் பிடிவாதக்காரச்சிறுவனாக வளர்ந்தாலும் எக்கச் சக்கமாகக் குறும்புகள் புரிந்தாலும் அந்த சிறுவயதிலேயே நீதியும் நேர்மையும் நிறைந்தவராகவும் அக்கிரமத்தை எதிர்த்துப் போராடுபவராகவும் இருந்தார்.

அவர் படித்த வகுப்பில் மாணவர் தலைவனாக ஒரு சிறுவன் இருந்தான். அவன் தண்ணீர் எடுத்து வைக்கப் பானை வாங்குவதற்காக மாணவர்களிடமிருந்து வசூலித்த

காசில் போண்டா வாங்கிச் சாப்பிட்டு வட்டுவிட்டான் அதை எம். ஜி. ஆர். அம்பலப்படுத்திஞர்.

அவருடையதுணிச்சலேயும்நேர்மையையும் பாராட்டிய ஆசிரியர், மாணவர் தலேவன் பொறுப்பிலிருந்து அந்த சிறுவனே நீக்கிவிட்டு அதற்கு எம். ஜி. ஆரை நியமித்தார்.

பொன்மனச் செம்மலிடம் முரட்டுத்தனம் இருந் தாலும் இளகிய நெஞ்சமும் இருந்தது. தினமும் காலேயில் அவரும் பெரியவர் சக்ரபாணியும் குடும்ப நண்பர் வேலு நாயருடன் குளிப்பதற்காக காவிரி ஆற்றுக்குச் செல்வது வழக்கம்.

போகும் வழியில் ஒரு காளி கோவில் இருந்தது. அங்கிருந்த காளி சிலேயின் தோற்றம் அச்சப்படுத்துவதாக இருக்கும். அதேபோல் அங்கிருந்த பூசாரியும் முரட்டுத் தனமானகடா மீசையுடன் பயங்கரமாகக்காட்சியளிப்பார்.

சில நாட்களில் பேய் பிடித்த பெண்களே அங்கு அழைத்து வருவார்கள். பூசாரி புளிய விளாறு கொண்டு அவர்களே அடித்துப் பேயை விரட்ட முயற்சிப்பார்.

அதைப் பார்க்கும் போதெல்லாம் பொன்மனச் செம்மலின் பிஞ்சு இதயம் பதறும். இந்தப் பெண்களுக்கு எப்படியெல்லாம் வலிக்கிறதோவென்று வேதனேப் படுவார்.

அப்போதெல்லாம் வேலுநாயர்தான் அவரைச் சமா தானப்படுத்துவார். பேய் பிடித்த பெண்களுக்கு எப்படி அடித்தாலும் வலிக்காது என்று விளக்கம் கொடுப்பார். அதைக் கேட்டபிறகே எம். ஜி. ஆரின் உள்ளம் ஓரளவு ஆறுதலடையும்.

அவரும் சக்ரபாணியும் காவிரி நதியில் உற்சாகமாகக் குளிப்பார்கள். ஒரு முறை அவ்வாறு குளித்துக் கொண்டி ருக்கும்போது சக்கரபாணியை வெள்ளம் இழுத்துக் கொண்டு போய்விட்டது.

ஆனல் வேலு நாயர் நன்ருக நீந்தத் தெரிந்தவர். அவர் உடனே வெள்ளத்தில் பாய்ந்து சென்று சக்ர பாணியைக் காப்பாற்றி கரைக்கு இழுத்து வந்தார்.

எம். ஜி. ஆர். தம்முடைய சகோதரரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறிஞர். அந்த சிறுவயதிலேயே

தம்முடைய சகோதரர் மீது அவர் எவ்வளவு பாசம் வைத்திருந்தார் என்பதை எடுத்துக் காட்டுவது போல் அந் நிகழ்ச்சி அமைந்தது.

அதன் பின் அவருக்கும் பெரியவர் சக்ரபாணிக்கும் காவிரிக்குக் குளிக்கச் செல்வது என்றாலே கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது!

அவர்களுடைய மாமா நாராயணன் நாயரைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டியது அவசியம். அவர் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் நாடகக் கம்பெனியில் பின்பாட்டுக் காரராக இருந்தார்.

அவர் மிகவும் சிக்கனமானவர். ஒரு காசு செல வழிப்பதாக இருந்தாலும் நன்றாக யோசித்துப் பார்த்து விட்டுத்தான் செய்வார்.

அவர் சிறுவயதிலேயே கேரளாவிலிருந்து தமிழகத்திற்கு வந்து குடியேறியவர். இங்கு தமிழில்தான் பேசவேண்டும் என்ற அவசியம் அவருக்கு ஏற்பட்டது.

ஆனால் அவருக்கு சரியாகத் தமிழில் பேச வரவில்லை. அதே சமயம் மலையாளமும் மறந்துபோய் விட்டது. எனவே மலையாளமும் தமிழும் கலந்து விசித்திரமாகப் பேசுவார்.

அது சிரிக்கும்படியாக இருக்கும். அதைக் கேட்டு எல்லாரும் கொல்லென்று சிரிப்பார்கள். ஆனால்நாராயணன் நாயரோ அவர்கள் தம்மைக் கேலி செய்வதாக நினைத்துக் கோபப்படுவார்.

ஒருமுறை வேலூரில் நாடகம் நடந்தது. அங்கு போய் விட்டுத் திரும்பியபோது அவர் ஒரு ஜோடி செருப்பை வாங்கி வந்தார். ஆனால் அவர் அதை உடனே போட்டுக் கொண்டுவிடவில்லை.

அதை ஒரு காகிதத்தில் சுற்றிப் பத்திரமாகப் பெட்டியில் வைத்துவிட்டுப் பழைய செருப்பையே போட்டுக் கொண்டு வெளியே போய்வந்தார்.

ஆனால் எத்தனை நாட்களுக்குத்தான் அந்தப் பழைய செருப்பு தாங்கும்? ஒருநாள் அது அறுந்து போய் உபயோகிக்க முடியாத நிலையை அடைந்தது.

வேறு வழியில்லாமல் அவர் பெட்டியிலிருந்து புதுச் செருப்பை முணகிக்கொண்டே எடுத்தார். காலில் அதைப் போட்டுக் கொள்ள முயன்ருர்.

ஆனால்...முடியவில்லை. செருப்பு சிறியதாக இருந்தது! காலில் நுழைய மறுத்தது.

நாராயணநாயர் விடவில்லை. கீழே நன்ருக உட்கார்ந்து கொண்டு செருப்பைக் காலில் நுழைத்துக்கொள்ளப் பெரிதாகப் போராடினுர்.

அதை அன்னை சத்யாவும் எம். ஜி. ஆரும் பார்த்தார்கள். சத்யா, ''என்ன...செருப்போடு சண்டை போட்டுக்கிட்டு இருக்கீங்க?'' என்று கேட்டார்.

''செருப்புக் கடைக்காரன் என்னை சதிச்சு. (மோசம் பண்ணிவிட்டான்.) அதான். என்று இழுத்தார், நாராயணன்நாயர்.

''காசு கொடுத்துத்தானே வாங்கினீங்க? பார்த்து வாங்கக் கூடாதா?'' என்று சிரித்துக்கொண்டே கூறினுர், அன்னை சத்யா.

அவர் சிரித்ததைப் பார்த்ததும் நாராயணன்நாயருக்குக் கோபம் வந்து விட்டது. ''களிக்கண்டா (கேலி பண்ண வேண்டாம்) சின்னம்மே...ஆயாள் சொன்ன பணம் கொடுத்தே செருப்பு வாங்கியது!'' என்று வேகமாகப் பேசினுர்.

''பிறகு கடைக்காரன் உங்களை எப்படிஏமாத்தினுன்?'' என்று கேட்டார், சத்யா.

நாராயணன் நாயர் அசடு வழிய திமிர்ந்தார். ''கடையிலே ஒரு செருப்பினே எனக்குப் பிடிச்சு. காலுக்கு செரியா இருந்திச்சு. ஆனு வெலா (விலை) ஜாஸ்தி சொல்லிச்சு. அதே மாதிரி இன்னொரு செருப்பு இருந்திச்சு. குறைஞ்ச வெலா பறைஞ்சதினே ஞான் பொட்லம் கட்டி வாங்கி வந்து. இப்போ அது செறுதா (சிறியதாக) இருக்கிந்நு!'' என்ருர்.

விலை குறைவாகச் சொன்னதால் அளவு சிறியதாக உள்ள செருப்பை வாங்கிக் கொண்டு வந்துவிட்டு அதைக் காலில் போட்டுக் கொள்ள முடியாதபோது கடைக்காரன் மீது பழியைப் போடும் நாராயணன் நாயரைப் பார்த்து

அன்னை சத்யாவும் அவருடைய இளைய மகனும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அன்னை சத்யா இலங்கையில் நகைகளை விற்று எடுத்து வந்த பணம் மிக வேகமாகத் தீர்ந்துவிட்டது. அவர்களை வறுமை வாட்டத் தொடங்கியது.

நாராயணன் நாயர் முடிந்தவரை உதவி செய்தார். ஆனால் குறைந்த வருமானமுள்ள அவரால் எவ்வளவுதான் உதவி செய்துவிட முடியும்?

மேலும் அவரிடம் குடிப் பழக்கம் இருந்தது. அந்தச் செலவைச் சரிக்கட்டிக்கொள்ள அவர் தன்னை ஒரு மந்திர வாதியென்று சொல்லிக் கொண்டார்.

எந்திரத் தகடுகளில் மந்திரங்களை எழுதிக் கொடுப்பது, தாயத்துகளைத் தயாரித்துக் கொடுப்பது போன்றவற்றால் ஓரளவு வருமானம் கிடைத்தது. அதைத் தன் உபரிச் செலவிற்குப் பயன்படுத்திக் கொண்டார்.

அன்னை சத்யா வறுமைக் கடலில் சிக்கி மிகவும் தத்தளித்துப் போனார். குழந்தைகளுக்கு சரியாக உணவு கொடுக்க முடியாத நிலை அவரை துடிக்க வைத்தது.

அவர் தன் குழந்தைகளுக்காக எந்த வேலையையும் செய்யத் தயாரானார். பிச்சை எடுப்பதைவிட வேலை செய்வதென்றும் கேவலமான செயல் அல்லவே? நான்கு வீட்டில் வேலை செய்தாவது தன் குழந்தைகளைக் காப்பாற்றுவது என்ற முடிவிற்கு அவர் வந்தார்.

அந்த சமயத்தில் தான் நாராயணன் நாயர் ஒரு யோசனை கூறினார். என்ன அது?

அவர் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் பின் பாட்டுக்காரராக இருந்தார் அல்லவா? அதே கம்பெனியில் சக்ரபாணியையும், எம். ஜி. ஆரையும் நடிப்பு பயிற்சி பெறுவதற்கு சேர்த்து விடலாம் என்பது தான் அவர் சொன்ன யோசனையாகும்.

அவர் அந்த யோசனை கூறியதிலும் ஒரு காரணம் அடங்கியிருந்தது. இரு சிறுவர்களையும் நாடக கம்பெனியில் சேர்ப்பதால் உடனே சம்பளம் கிடைத்து விடப் போவதில்லை. ஆனால் இருவரும் வயிறாரச் சாப்பிடுவதற்கு உணவு கிடைக்குமே.

உடனடியாகக் கிடைக்கக் கூடிய லாபம் அது தான். இரண்டாவதாக அவர்கள் சில மாதங்களில் நன்றாகப் பயிற்சி பெற்று பிரமாதமாக நடிக்க ஆரம்பித்து விட்டால் ஓரளவு நல்ல சம்பளமும் கிடைக்கும். எதிர் காலத்தில் அவர்கள் நல்ல நடிகர்களாகப் பிரகாசிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

இந்த யோசனையை சொன்னதற்காக நாராயணன் நாயரைத் திரைப்பட உலகமும் தமிழக மக்களும் நிச்சய மாகப் பாராட்டப்பட வேண்டும்.

அவர் அன்று அந்த யோசனையைச் சொன்னதால் தானே தமிழ்த் திரையுலகிற்கு ஒரு மக்கள் திலகமும் சிறப்பான குணச் சித்திர நடிகர் ஒருவரும் கிடைத்தார்கள்.

அவருடைய யோசனையால் தானே இன்று தமிழக மக்களுக்கு ஓர் ஒப்பற்ற தலைவர்—மக்களின் துயர்களைத் துடைப்பதில் அதிகமான ஆர்வம் கொண்ட தலைவர் கிடைத்திருக்கிறார்?

பெரியவர் சக்ரபாணி, இளையவர் எம். ஜி. ஆர்—ஆகிய இருவருடைய எதிர்கால வாழ்வும் உன்னதமாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் நாராயணன் நாயர் அக்கருத்தை வெளியிட்டார்.

ஆனால் அன்னை சத்யா முதலில் அவர் யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. தம்முடைய அருமைச் செல்வங் களைப் பிரிய அவருக்கு மனமே வரவில்லை.

எனினும் அவர்களுடைய குடும்ப நண்பரான வேலு நாயரும் வற்புறுத்தவே அன்னையார் வேறு வழியில்லாமல் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டார். தன் குழந்தை கள் தன்னை பிரிந்தாலும் அவர்களுக்கு வயிறார உணவு கிடைக்குமேயென்று நிம்மதியடைந்தார்.

அவர்களுக்கு சிறப்பான எதிர் காலம் அமைய மார்க்கம் இருக்கிறது என்பதால் மனதைக் கல்லாக்கிக் கொண்டு குழந்தைகளைப் பிரிய சம்மதித்தார்.

அப்போது நம் பொன்மனச் செம்மல் மூன்றாவது வகுப்பை முடித்து நான்காவது வகுப்பிற்குச் செல்ல விருந்தார். பெரியவர் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண் டிருந்தார். அவ்விருவரையும் நாராயணன் நாயருடன் அனுப்பி வைத்தார், அன்னை சத்யா.

நாராயணன் நாயர் வேலை பார்த்து வந்த மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி அந்த சமயத்தில் பாண்டிச் சேரிக்குச் சென்று வெற்றிகரமாக நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தது.

அவரும் இரு பிள்ளைகளும் கும்பகோணத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு ரயில் மூலம் புறப்பட்டார்கள். ரயில்வே ஸ்டேஷனிற்கு வந்து அன்னை சத்யா அவர்களுக்கு விடை கொடுத்த போது கண் கலங்கிப் போனார். அவர் மனம் பதறியது.

எம். ஜி. ஆருக்கும் தன் அன்னையைப் பிரிய மனமில்லை. ஓவென்று அழுதார். ரயில் பெட்டியிலிருந்து இறங்கி அன்னையாரிடம் ஓடி விடவும் முயன்றார். அவரை பெரியவர் சக்ரபாணியும் நாராயணன் நாயரும் தான் ஓரளவு சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றார்கள்.

மறுநாள் மூவரும் பாண்டிச்சேரிக்குப் போய்ச் சேர்ந் தார்கள். என்ன இருந்தாலும் எம். ஜி. ஆர் அப்போது ஏழு வயது சிறுவன் தானே?

பாண்டிச்சேரியில் அமைந்திருந்த பெரிய வீதிகளையும், வீடுகளையும் பார்த்ததும் அவர் பிரமித்துப் போனார். ஒரு வித ஆர்வத்துடன்—தாயைப் பிரிந்த கவலையை ஓரளவு மறந்து—நாலாப்பக்கங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தார்.

அவரும் பெரியவர் சக்ரபாணியும் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் நாடகக் கம்பெனியில் நடிப்புப் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

சச்சிதனாந்தம் பிள்ளை என்பவர்தான் அந்த நாடகக் கம்பெனியின் உரிமையாளர், அவர் ஆஜானுபாகுவான உடற்கட்டுடனும் முறுக்கு மீசையுடனும் கம்பீரமான தோற்றம் கொண்டவர். மல்யுத்தம், குத்துச்சண்டை, சிலம்பம் முதலானவற்றிலும் வல்லவர்.

அந்த நாடகக் கம்பெனி மிகப் பிரயல்யமாகச் செயல் பட்டு வந்தது என்றால் அதற்கு அவருடைய கண்டிப்பு ஒரு முக்கிய காரணமாகும். கம்பெனியில் ஒழுங்கும் கட்டுப் பாடும் நிலவவேண்டும் என்பதில் அவர் மிகவும் உறுதியாக நடந்து கொண்டார்.

சச்சிதானந்தம் பிள்ளை நடந்து வருவதே ஓர் அழகு. சிங்கம் வருவதுபோல் கம்பீரமாக இருக்கும். அவர் எம். ஜி. ஆரை மிகவும் வசீகரித்துவிட்டார்.

சச்சிதனாந்தம் பிள்ளையிடம் எல்லாருக்கும் மரியாதையும் பயமும் இருந்தது போலவே எம். ஜி. ஆருக்கும் இருந்தது. இருப்பினும் பிள்ளையவர்களின் ஆரோக்கியமான உடல்வாகு எம். ஜி. ஆரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

பின்னால் நம் பொன்மனச் செம்மல் தம்முடைய உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டியதற்கு அதுவும் ஒரு காரணமாகும்.

அந்தக் கம்பெனியில் வாத்தியாராக கந்தசாமி முதலியார் இருந்துவந்தார். அவர் பிரபல நடிகர் எம். கே. ராதாவின் தந்தையாவார்.

அப்போது அக்கம்பெனியில் பி. யு. சின்னப்பா, டி. எஸ். பாலையா, பி. ஜி. வெங்கடேசன், பக்கிரி சாமிபிள்ளை, கன்னையா பாகவதர், அவர் மகன் கிருஷ்ண மூர்த்தி, டி. ஆர். பி. ராவ், கே. பி. கேசவன் முதலானவர்கள் இருந்தார்கள்.

அவர்களுடன் காளி. என் ரத்தினமும் அங்குஇருந்தார். பெரியவர் சக்ரபாணிக்கும் இளையவர் எம். ஜி. ஆருக்கும் நடிப்புப் பயிற்சி கொடுக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

எம். ஜி. ஆர். பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே பள்ளி நாடகம் ஒன்றில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதுவொரு சுவையான நிகழ்ச்சி!

'லவகுசா' என்பது அந்நாடகமாகும். எம். ஜி. ஆர். குசனாகவும் கருப்பையா என்னும் மாணவன் லவனாகவும் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆசிரியர் வகுப்பில் சொல்லிக் கொடுக்கும் கடவுள் வாழ்த்துப் பாடல்களை அவ்விருவருந்தான் கூச்சமில்லாமல் உரத்த குரலில் பாடுவார்கள். ஆகையில் அந்நாடகத்தில் முக்கியமான இரு வேடங்களுக்கு அவ்விருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

குகன் வேடத்தில் நடிக்க எம். ஜி. ஆர். தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அந்தவேடத்தில் நடிக்க மற்ருெருமாணவன் ஆசைப்பட்டிருந்தான். அவனுக்கு அந்த வேடம் கிடைக்காதது ஏமாற்றத்தைக் கொடுத்தது, அதே நாடகத்தில் சத்ருக்கனுக நடிக்க அவன் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

அந்நாடகத்தில் குகனும் சத்ருக்கனனும் சண்டை போடுவது போலவும் அதில் குகன் வெற்றி பெறுவது போலவும் ஒரு காட்சியும் இருந்தது.

எம். ஜி. ஆருக்கு ஓர் ஆசிரியர் நாடகப் பயிற்சி அளித்தார். அவர் எம். ஜி. ஆரிடம், ''டேய் இராமச்சந்திரா... உனக்குக் கொடுக்கப்பட்டிருப்பது முக்கியமான வேடம் அதைப் புரிந்து கொண்டு தவறு இல்லாமல் வசனங்களை கணீரென்று பேசவேண்டும். அது மட்டுமல்ல. சண்டைக் காட்சியில் நன்ருகச் சண்டை போட வேண்டும். சண்டையில் நீதான் வெற்றி பெற வேண்டும் என்பதை மறந்து விடாதே. சண்டையில் தோற்ருயோ, உன் முதுகுத் தோலை உரித்து விடுவேன்'' என்று கூறிவிட்டார்.

நாடகம் ஆரம்பமாகியது. சண்டைக் காட்சியில் தோற்றுவிடக் கூடாதென்று ஆசிரியர் எச்சரித்தது எம். ஜி. ஆருக்கு மீண்டும் மீண்டும் நினைவு வந்து கொண்டிருந்தது. சண்டைக் காட்சியை அவர் பரபரப்புடனும் ஆவலுடனும் எதிர்நோக்கியவாறு மற்ற காட்சிகளில் ஒருவாறு நடித்து முடித்தார்.

கடைசியில் சண்டைக் காட்சியும் வந்தது. அவர் மேடைக்குச் செல்வதற்கு முன்பாகவே சத்ருக்கனன் மீது எப்படிப் பாயவேண்டும், அவ்வாறு அவனைக் கீழே தள்ள வேண்டும், எப்படியெப்படி சண்டை போட வேண்டும் என்றெல்லாம் தனக்குள் ஒரு திட்டம் போட்டு வைத்துக் கொண்டார்.

சண்டைக் காட்சி ஆரம்பமாகியது. அதில் குகனும் சத்ருக்கனனும் முதலில் வசனங்களைப் பேசி முடித்தார்கள். அதன் பின் சத்ருக்கனன் குகனை சண்டைக்கு அழைக்க வேண்டும். அதன் பிறகு இருவரும் சண்டை போடவேண்டும். அப்படித்தான் நாடக அமைப்பு இருந்தது.

ஆனால் சத்ருக்கனன் அழைப்பதற்கு முன்னால் அவன் மேல் பாய எம். ஜி. ஆர். தயாராக இருந்தார். சத்ருக்கனனாக நடித்த சிறுவன் அதைப் புரிந்து கொண்டான் எனவே அவன் சண்டைக்கு அழைக்காமலேயே எம். ஜி. ஆர் மீது பாய்ந்து விட்டான்!

பொன்மனச் செம்மல் திடுக்கிட்டுப் போனார். தான் போட்டு வைத்திருந்த திட்டங்கள் தவிடுபொடியாகி விட்டது. சத்ருக்கனனிடம் தோற்றுப் போனால் ஆசிரியர் முதுகுத்தோலை உரித்து விடுவதாகச் சொல்லியிருக்கிறாரே! எனவே...

மேடையிலேயே முழு மூச்சுடன் சண்டை போட்டு ஒரு கை பார்த்துவிடுவது என்ற முடிவிற்கு அவர் வந்தார். ஆக்ரோஷமாக சத்ருக்கனனுடன் சண்டை போட்டார்.

ஆனால் அந்த வேடம் போட்டிருந்த சிறுவனோ நாடக அமைப்பிற்கு மாறாக குகனை வென்றுவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆவேசமாக சண்டை போட்டான். அவ்வாறு வென்று குகன் வேடத்திற்குத் தானே பொருத்த மானவன் என்று நிரூபிக்க நினைத்திருக்கவேண்டும்.

ஆகையால் இரு சிறுவர்களிடையே நடைபெற்ற அந்த சண்டை மிகவும் பரபரப்பான முறையில் நடைபெற்றது. ஒருவரையொருவர் தள்ளி, உருட்டி விட்டார்கள். குத்தியும், கிள்ளியும் கட்டிப்புரண்டு மிகக் கடுமையாகச் சண்டை போட்டார்கள்.

இருவரும் எல்லாரையும் மறந்தார்கள். அந்த சண்டையில் எப்படியாவது வென்று விடவேண்டும் என்ற எண்ணந் தான் இருவரிடமும் மேலோங்கி நின்றது. கடைசியில்...

இருவருக்கும் பிரம்படி விழுந்தது. இரண்டு ஆசிரியர்கள் இருவருடைய முதுகிலும் அடித்து வேகமாகத் தூக்கி நிறுத்தினார்கள்.

அப்போதுதான் அவ்விரு சிறுவர்களும் சுயநினைவு பெற்றார்கள். காட்சி முடிந்து திரையும் இறக்கி விடப் பட்டிருந்ததைக் கவனித்தார்கள்.

இருவரும் போட்ட கடுமையான சண்டை காரணமாக சத்ருக்கனன் போட்டிருந்த மேக்கப் கலைந்து போயிருந்தது.

எம். ஜி. ஆர் வைத்துக் கொண்டிருந்த டோபாவைக் காணவில்லை.

அந்த சண்டை முடியவில்லையென்றாலும் அதில் தானே வெற்றிபெற்றதாக எம்.ஜி.ஆர்.கருதினார். சத்ருக்கனனைப் பார்த்துப் பெருமிதத்துடன் சிரித்தார்.

இவ்வாறு பள்ளி நாடக அனுபவமே அவருக்கு ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியாக அமைந்து விட்டது!

பெரியவர் சக்ரபாணிக்கும் இளையவர் எம். ஜி. ஆருக்கும் நடிப்புப் பயிற்சி ஆரம்பமாகியது. நடிப்புப் பயிற்சி என்றால் நடிக்கவும் வசனம் பேசவும் மட்டும் கற்றுக் கொடுக்கும் பயிற்சி அல்ல.

நடிப்பு, வசனம், நாட்டியம், சண்டை—இத்தனை துறைகளிலும் பயிற்சி கொடுக்கப் பட்டதுடன் உடல் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்பதிலும் தீவிரமாக கவனம் செலுத்தப்பட்டது.

இப்போதெல்லம் நாடகத்தில் நடிக்க அரை மணி நேரத்தில் தயாராகி விடுகிறார்கள். வேறு வேலைகள் அல்லது தொழில்களைக் கவனித்துக் கொண்டே நாடகங் களிலும் நடிக்கிறார்கள்.

ஆனால் அந்தக் காலத்தில் அப்படியில்லை. அதை குரு குலவாசம் போல் நடத்தி வந்தார்கள். ஒரு நாடக நடிகன் என்றால் அவனுக்கு நடிப்பு, நடனம், சண்டை போடுதல்—எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் அத்துடன் அவனுடைய உடலும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அதற்காக மிகக் கடுமையான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

காலையில் ஐந்து மணிக்கு எழுந்து, காலைக்கடன்களை முடித்துக் கொண்டு கடுமையாக உடற்பற்சி செய்ய வேண்டும். அது முடிந்ததும் குளித்து விட்டு காலை உணவு சாப்பிட வேண்டும்.

பிறகு நடனப் பயிற்சி ஆரம்பமாகும். பிறகு வசனங் களை மனப்பாடம் செய்து பேசவேண்டும். அதன்பின் நடிப்புப்பயிற்சி கொடுக்க வேண்டும்.

அது முடிந்ததும் மதிய உணவு புசிக்கவேண்டும். பின்னர் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளலாம். அதன் பின் மீண்டும் நடிப்புப் பயிற்சி ஆரம்பமாகும்.

அது முடிந்ததும் நாடகம் நடைபெறும் இடத்திற்குச் செல்லவேண்டும். அங்கு கொடுக்கப்படும் சிறுசிறு வேலைகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

இதுதான் அந்தக் காலத்தில் கொடுக்கப்பட்ட நடிப்புப் பயிற்சி ஆகும்!

எம். ஜி.ஆருக்கு உடற்பயிற்சியும் சண்டைப் பயிற்சியும் மிகவும் பிடித்திருந்தன. எனவே அவர் மிகுந்த உற்சாகத்துடன் அவற்றைக் கற்றுக் கொண்டார்.

வசனங்களை மனப்பாடம் செய்து பேசுவதிலும் நினைவாற்றல் மிகுந்த அவருக்கு சிரமம் எதுவும் உண்டாகவில்லை. நடனமாடுவது தான் அவருக்குப் பெரும் தொல்லையாகத் தோன்றியது.

அந்த நாடகக் கம்பெனியில் ஸ்ரீ ராமுலு என்பவர் நடன ஆசிரியராக இருந்தார். அவர் மிகவும் கண்டிப்பானவர். தான் சொல்லிக் கொடுப்பதை நன்றாக ஆடிக் காட்டும் வரை விடமாட்டார்.

முதலில் அவர் ஆடிக் காட்டுவார். நடனம் கற்றுக் கொள்பவர்கள் அதே போல் ஆடிக் காட்ட வேண்டும். தவறு செய்தால் ஒரு முறை, இரண்டு முறை என்று எச்சரிப்பார்.

மூன்றும் முறையும் தவறு செய்தால் அவருடைய வாய் எச்சரிக்காது. அவருடைய கையிலிருக்கும் நீண்ட பிரம்புத்தான் எச்சரிக்கும்!

எம். ஜி. ஆருக்கு சரியாக நடனம் ஆட வரவில்லை. அவர் சின்னஞ்சிறுவன் ஆயிற்றே என்று கூடப் பாராமல் வெளுத்துக் கட்டி விடுவார்.

—2

பெரியவர் சக்ரபாணியும் அவ்வாறு அடிக்கடி பிரம்படி வாங்கிக் கொண்டிருந்தார். பொறுக்க முடியாத அந்த அடிகளை அவர் தம்முடைய குடும்ப நிலையை எண்ணிப் பார்த்துப் பொறுத்துக் கொள்வார்.

ஒரு நாள் நடன ஆசிரியர் இளையவர் எம். ஜி. ஆரை விளாசித் தள்ளி விட்டார். இளையவர் அழுது கொண்டே பெரியவரிடம் வந்தார். ''இனி இங்கிருக்க வேண்டாம். நம் அன்னையிடமே சென்று விடலாம்'' என்று விம்மலுடன் கூறினார்.

ஆனால் பெரியவரோ தம்பியை அன்புடன் தடவிக் கொடுத்து, ''தம்பி...நாம் அன்னையிடம் சென்று என்னச் செய்யப் போகிறோம்? நம் குடும்ப நிலைமை உனக்குப் புரியவில்லையா? அங்கு போனால் நாம் அவர்களுக்குத் தான் பாரமாக இருப்போம்'' என்றார்.

அவர் அவ்வாறு எடுத்துச் சொன்னதும் நிலைமையைப் புரிந்து கொண்ட எம். ஜி. ஆர், ''சரிண்ணா...இனிமேல் நான் கவனித்து ஆடுகிறேன்'' என்று சொன்னார்.

ஆனால் அவரும் பெரியவர் சக்ரபாணியும் மேலும் நடன ஆசிரியரிடம் பிரம்படி வாங்குவதைத் தடுக்கும் வகையில் ஒரு சம்பவம் நடை பெற்றது.

அந்த நாடகக் கம்பெனியில் பக்கிரிசாமி பிள்ளை என்பவர் நகைச்சுவை நடிகராக இருந்தார். அவர் மிகவும் திறமையானவர். அவருடைய நகைச்சுவை நடிப்பிற்கும் வசனத்திற்கும் பொது மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது.

அவர் அந்நாடகக் கம்பெனியின் உரிமையாளரான சச்சிதானந்தம் பிள்ளைக்கு மிகவும் வேண்டியவர். அவர் மிகவும் நல்லவராகவும் அந்நாடகக் கம்பெனியில் இருக்கும் நடிகர்கள் அனைவரிடமும் அன்புடன் நடந்து கொள்பவராகவும் இருந்தார்.

அதே சமயம் யார் தவறு செய்தாலும் அதைத் தயங்காமல் உடனுக்குடன் தண்டித்து விடுவார். இது சிலருக்குப் பிடிக்கவில்லையென்றாலும் கூட முதலாளிக்கு மிகவும் வேண்டியவர் என்பதால் அவரைப் பற்றி எதுவும் சொல்லாமல் ஒதுங்கிக் கொண்டார்கள்.

நடன ஆசிரியர் சக்ரபாணியையும், எம். ஜி. ஆரையும் பிரம்பால் வெளுத்துக் கட்டுவதை ஒரு முறை அவர் பார்த்து விட்டார். கம்பெனியில் அவ்விரு சிறுவர்களும் சேர்ந்து சில தினங்களே ஆகியிருந்தன. அதற்குள் அவர்களுக்குப் பொறுமையாகச் சொல்லிக் கொடுக்காமல் சிறு தவறு செய்தாலும் பிரம்பால் விளாசுவது மிருகத்தனமான செயலாகுமென்று அவர் கருதினார்.

அதனால் நடன ஆசிரியர் அவ்விருவருக்கும் நடனப் பயிற்சி கொடுக்கும் போது அவரும் அங்கு வந்து உட்கார்ந்து கொள்வார். இருவரும் தவறு செய்யும் போது நடன ஆசிரியர் பிரம்பால் அடிக்க முயன்றால் அவர் அதைத் தடுத்திடுவார். புதியவர்களுக்குப் பொறுமையாக நடனத்தைக் கற்றுக் கொடுக்கும்படி கூறுவார்.

அதன் விளைவாக பெரியவரும் இளையவரும் காட்டு மிராண்டித் தனமாக பிரம்படி வாங்குவது நின்றது. ஆனால் நடன ஆசிரியர் ஸ்ரீராமுலுவுக்கு எக்கச்சக்கமாகக் கோபம் வந்து விட்டது.

பக்கிரிசாமி பிள்ளை வீணாகத் தன் விவகாரத்தில் தலையிடுவதாகக் கருதிப் பொருமினார். முதலாளி சச்சிதானந்தம் பிள்ளையிடம் சென்று புகார் செய்தார்.

ஆனால் முதலாளிக்கு பக்கிரிசாமி பிள்ளையை நன்றாகத் தெரியும். பக்கிரிசாமி பிள்ளை ஒரு காரியத்தைச் செய்கிறார் என்றால் அதை மனிதாபிமானத்தின் அடிப்படையில்தான் செய்வார். இதைப் புரிந்து கொண்டிருந்த

முதலாளி நடன ஆசிரியர் சொன்ன புகாரைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

நடன ஆசிரியரைப் போலவே நடிப்புப் பயிற்சி கொடுத்த காளி. என். ரத்தினமும் தவறு செய்யும்போது தாராளமாக அடிக்கக் கூடியவராக இருந்தார்.

தான் அவ்வாறு மிகுந்த கண்டிப்புடன் நடந்து கொண்டால்தான் எல்லா நடிகர்களும் ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் இருப்பார்கள் என்பது அவருடைய எண்ணம்! அவரைக் கண்டாலே அக்கம்பெனியிலிருந்த நடிகர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது.

பொன்மனச் செம்மல் இதுவரை கோடிக்கணக்கான பணத்தைத் தானமாக வழங்கியிருக்கிறார். பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தே அவர் கரங்கள் சிவந்து போய் விட்டன.

அந்தக் கொடை வள்ளல் முதன் முதலாக நாடகக் கம்பெனியில் சேர்ந்தது அவருக்கு சம்பளமாகக் கொடுக்கப் பட்டது எவ்வளவு தெரியுமா? நாலணா!

அந்த நாலணா என்பது தினச் சம்பளம் அல்ல. மாதச் சம்பளம்!

பயிற்சிக் காலம் முடிந்ததும் 'பவளக் கொடி' நாடகத்தில் புலந்திரன், ராமாயணத்தில் குழந்தைப் பருவ ராமன், லட்சுமணன்—போன்ற சிறுவர் தாங்கி நடிக்கும் வேடங்கள் கொடுக்கப்படும். இதை 'பால பார்ட்' வேடங்கள் என்று சொல்வார்கள்.

அதே போல் நாடகத்தின் கதாநாயகி வேடத்திற்கு ஸ்திரீ பார்ட் வேடம் என்றும் கதாநாயகன் வேடத்திற்கு ராஜபார்ட் வேடம் என்றும் குறிப்பிடுவார்கள்.

எம். ஜி. ஆருக்குப் பயிற்சிக் காலம் முடிந்து அவர் நாடகங்களில் பால பார்ட் வேடங்களை ஏற்று நடித்த

போது அவருக்கு மாதச் சம்பளமாக ஐந்து ரூபாய் கொடுக்கப்பட்டது.

அந்த ஐந்து ரூபாய் மாதா மாதம் அவருடைய அன்னையாருக்கு அனுப்பப்படும் என்று அவரிடம் சொல்லப்பட்டது அதைக் கேட்டு அவர் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

''நாம் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டோம். நம்முடைய சம்பளப் பணம் மாதா மாதம் நம் அன்னையாருக்குப் போய்ச் சேரும். அதைப் பார்த்ததும் அவர்கள் ஆனந்த மடைவார்கள். இனி, மேலும் மேலும் கஷ்டப்பட்டு நடித்து பெரிய நடிகனுவேன். கை நிறையச் சம்பாதிப்பேன். என் அன்னையை ஓர் அரசிபோல் வைத்துக் காப்பாற்றுவேன். இனிமேல் அவர்களுக்கு எவ்விதக் குறையும் ஏற்படாது''

இவ்வாறு தனக்குள் கற்பனை பண்ணிப் பூரித்துப் போனுர், பொன்மனச் செம்மல்.

பொதுவாக, அந்தக் கால நாடகக் கம்பெனிகளில் ராஜ பார்ட் வேடம் போடுபவருக்குத் தனி மரியாதை கிடைக்கும். அவரால்தான் கம்பெனிக்கே வருமானம் கிடைத்து வருவதுபோல் பேசிக் கொள்வார்கள்.

எல்லாரும் ராஜபார்ட் நடிகராகிவிட முடியாது. அதற்கு முதலில் கம்பீரமான தோற்றமும் உடற்கட்டும் இருக்க வேண்டும். நன்ருக நடிக்கவும் பாடவும் வசனங்களைக் கணீரென்ற குரலில் கடகடவென்று பேசவும் தெரிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட நடிகர்களுக்கே ராஜ பார்ட் வேடம் கொடுக்கப்படும்.

ராஜ பார்ட் நடிகருக்கும் மற்ற நடிகர்களுக்குமிடையே நிறைய வேறுபாடுகள் இருக்கும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், உணவு, உடை, தங்குமிடம்—எல்லா வற்றிலும் விசேஷக் கவனம் செலுத்

தப்படும். மற்ற நடிகர்கள் அவருடன் நெருங்கிப் பேசவும் அனுமதிக்கமாட்டார்கள்.

இதன் காரணமாக சில ராஜபார்ட் நடிகர்களுக்கு எக்கச்சக்கமாகத் தலைக்கனம் ஏற்பட்டு விடுவதுண்டு. தங்களால்தான் அந்த நாடகக் கம்பெனியே வாழ்ந்து வருகிறது என்று நினைப்பார்கள். மற்ற நடிகர்களைப் புழுக் களாக மதிப்பார்கள்.

ஆனால் இவர்களுக்கு விதிவிலக்காக அந்தக் காலத்தில் இரண்டு ராஜ பார்ட் நடிகர்கள் விளங்கி வந்தார்கள். ஒருவர் எஸ். ஜி. கிட்டப்பா. மற்றவர் பி. யு. சின்னப்பா.

இவ்விருவரும் மனிதாபமானத்துடன் நடந்து கொள் வார்கள். இவர்கள் அந்தக் காலத்தில் நாடக உலகில் கொடி கட்டிப் பறந்தாலும் மற்ற நடிகர்களுடன் சரிசம மாகவும் அன்பாகவும் பழகுவார்கள்!

பொதுவாக, நாடகக் கம்பெனியில் நடிப்புப் பயிற்சி பெறும் எவருக்கும் ராஜபார்ட் நடிகராக உயர்ந்துவிட வேண்டும் என்பதுதான் லட்சியமாக இருக்கும். நம் முடைய பொன்மனச் செம்மலுக்கும் அதுவேதான் லட்சிய மாக இருந்தது.

அவர் நாடகப் பயிற்சி முடிந்து முதன் முதலாக நடித்த நாடகம் மகாபாரதம் ஆகும். அர்ச்சுனன் வில் வித்தை கற்றுக் கொள்ளும்போது அவன் எய்யும் அம்புகளைத் தேடிப் பிடித்து எடுத்து வந்து கொடுக்கும் இளவரசன் உத்தரன் என்னும் வேடம் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

அதுவும் பால பார்ட் வேடமே. முதல் நாளே ஒரு தமாஷ் நடந்தது. அவருக்கு ஆடைகளையும் அணிகளையும் போட்டுவிட்ட சிறுவன் ஒரு தவறு செய்து விட்டான். இடது காலில் போட்டுக் கொள்ளக்கூடிய ஷூக்களையே அவருடைய இரண்டு கால்களிலும் போட்டுவிட்டான்.

பொன்மனச் செம்மல் நாடகத்தில் பேசிய முதல் வசனம் ''ஐயோ பாம்பு...ஐயோ பாம்பு... ஓடி வாங்க... காப்பாத்துங்க...''

புதரில் அம்புகளைத் தேடி எடுக்கச் செல்லும் உத்தரன், இவ்வாறு அலறியடித்துக் கொண்டே அர்ச்சுனனிடம் ஓடி வரவேண்டும்.

எம். ஜி. ஆரும் அப்படித்தான் ஓடி வந்தார். ஆனால் அப்போது ஷூ நழுவி தடுக்கிவிட்டது. விளைவு? அவர் அர்ச்சுனன் மீதே விழுந்து விட்டார்.

ஆயினும் நாடகம் பார்த்தவர்கள் அதை இயற்கையான—உணர்ச்சிகரமான நடிப்பு—என்று கருதி கைதட்டி வரவேற்பு கொடுத்தார்கள்.

இவ்வாறு முதல்நாளிலேயே ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார், எம். ஜி. ஆர்.

ஆனால் அடுத்த நாடகத்தில் அவரால் அவ்வாறு பாராட்டைப் பெறமுடியவில்லை. அதற்குப் பதிலாகக் கொடூரமான அனுபவம்தான் கிடைத்தது.

அவர் இரண்டாவதாக நடித்த நாடகம் 'நல்ல தங்காள்' நல்லதங்காளிற்கு ஏழு குழந்தைகள். அவள் ஏழு குழந்தைகளையும் கிணற்றில் வீசிவிடுவதாகக் கதையமைப்பு இருந்தது.

எம். ஜி. ஆருக்கு ஏழாவது குழந்தையாக நடிக்கும் வேடம் கொடுக்கப்பட்டது. நல்லதங்காள் ஆறு குழந்தைகளை சுலபமாகத் தூக்கிக் கிணற்றில் போட்டுவிடுவாள். ஆனால் ஏழாவது குழந்தை மட்டும் அவளிடம் சிக்க மாட்டான். அழுதுகொண்டே அங்குமிங்கும் ஓடுவான். தன்னை விட்டுவிடுமாறு கெஞ்சுவான். கடைசியில்தான் அவள் கையில் சிக்குவான். இதுதான் நாடக அமைப்பு.

நாடகம் ஆரம்பமாகியது. அந்தக் காட்சியும் வந்தது நாடகத்தின் உச்சக்கட்ட காட்சியே அதுதான். நல்ல தங்காள் தன் குழந்தைகளை ஒவ்வொன்ருகத் தூக்கிப் போடுவதும் கடைசிக் குழந்தை மட்டும் கைக்குக் கிடைக்காமல் தன்னை விட்டுவிடும்படி கெஞ்சியவாறு அங்கு மிங்கும் ஓடுவதும் கடைசியில் அவனையும் பிடித்துத் தூக்கிக் கிணற்றில் போடுவதும் நாடகம் பார்க்க வந்திருக் கும் தாய்மார்களைக் கண் கலங்கி அழவைத்துவிடும்!

நல்லதங்காள் சுலபமாக ஆறு குழந்தைகளையும் தூக்கிக் கிணற்றில் போட்டாள். பிறகு ஏழாவது மைந்தனுன எம். ஜி. ஆரை நோக்கி, "கண்ணே வாடா... அருமை மைந்தனே வாடா... ராஜா வாடா..." என்று பாடியவாறு நெருங்கி வந்தாள்.

அப்போது எம். ஜி. ஆர், "அம்மா...என்னை விட்டு விடு...எள்ளும் தண்ணீரும் தெளிப்பதற்காகவாது என்னை உயிருடன் விட்டுவிடம்மா..." என்று அழுதவாறு கூறிக் கொண்டே அங்குமிங்கும் ஓடவேண்டும்.

பொன்மனச் செம்மலும் அப்படித்தான் ஓடினுர். வசனங்களையும் ஒழுங்காகப் பேசினுர். ஆனுல் அழுகை மட்டும் வரவில்லை. அவரும் எவ்வளவோ முயன்ருர். பிற் காலத்தில் திரைப் படங்களில் சோகக் காட்சிகளில் உணர்ச்சிகரமாக அழுது நடித்துத் தாய்மார்களின் கண் களிலிருந்து கண்ணீரை அருவி நீராகக் கொட்டச் செய்த அவருக்கு அன்று அழுகையே வரவில்லை.

ஆனுல் அழுதுகொண்டே வசனம் பேசியவாறு அங்கு மிங்கும் ஓடினுல்தான் உணர்ச்சிகரமாக இருக்கும். அவ்வாறில்லாமல் வெறும் வசனத்தை மட்டும் பேசிக் கொண்டு ஓடுவதானது செயற்கையாகத் தோன்றியதுடன் அக்காட்சிக்கான அழுத்தத்தையும் கொடுக்கவில்லை.

அதைக் கவனித்த காளி என். ரத்னம் மேடையில் திரைக்குப் பின்னால் ஒரு பக்கமாக நின்று கொண்டார். அந்தப் பக்கமாக எம். ஜி. ஆர் ஓடி வரும்போது அவரைக் குபீரென்று உள்ளே இழுத்து முதுகில் ஓங்கி அறைந்து அனுப்பி வைத்தார்.

மறுபக்கம் நன்னைய பாகவதர் நின்று கொண்டிருந்தார். அந்தப் பக்கமாக ஓடினால் அவர் எம். ஜி. ஆரின் தலையில் பலமாகக் குட்டினார். வேறு பக்கம் ஓடினால் தாளக் கட்டையைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் நாராயணன் நாயர் அந்தத் தாளக் கட்டையாலேயே அவர் தலையில் அடித்தார்!

அதற்கு மேலும் எம். ஜி. ஆருக்கு அழுகை வராதிருக்குமா?

தாங்க முடியாமல் உதை வாங்கும் போது எல்லா சிறுவர்களுக்கும் அன்னையின் நினைவு தானே வருகிறது? 'அம்மா' என்று தானே அலறுகிறார்கள்?

அதே போல் தான் அப்போது பொன் மனச் செம்மலுக்கும் தம் அன்னையாரின் நினைவு தான் வந்தது. அவரை நினைத்தவாறு 'அம்மா...அம்மா...' என்றுக் குலுங்கிக் குலுங்கி அழுதுக் கொண்டே அங்குமிங்கும் ஓடினார்.

அது அற்புதமான நடிப்பாக அமைந்து விட்டது. நாடகத்தைப் பார்க்க வந்திருந்த தாய்மார்கள் கண்ணீர் வடித்து அனுதாபம் கொண்டார்கள்!

அந்த நாடகக் கம்பெனி ஒவ்வொரு ஊராகச் சென்று தங்கள் நாடகங்களை வெற்றிகரமாக நடத்தி வந்தது. பாலபார்ட் வேடம் தாங்கும் சிறுவர்களைக் கவனிக்கும் பொறுப்பு நாராயணன் நாயரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

அங்கு எம். ஜி. ஆர், சக்ரபாணி ஆகிய இருவரைத் தவிர பாஸ்கரன் என்பவரும் பாலபார்ட் வேடம் ஏற்று நடித்து வந்தார். அம்மூவருடைய சட்டை, வேட்டிகளை நாராயணன் நாயரே துவைத்துக் கொடுத்து வந்தார்.

பாஸ்கரனுக்குக் கம்பீரமாகவும் அழகாகவும் தோற்றம் கொண்டிருந்த எம். ஜி. ஆர் மீது பொறாமை இருந்தது. அதன் காரணமாக நாராயணன் நாயர் துவைத்துக் கொடுக்கும் எம். ஜி. ஆரின் வேட்டியில் யாருக்கும் தெரியாமல் அழுக்கை ஏற்படுத்தி வைத்து விடுவார்.

மறுநாள் வேட்டியைத் துவைக்கும் போது நாராயணன் நாயர் அதைப் பார்த்து விட்டு எம். ஜி. ஆரைத் திட்டுவார். கோபம் அதிகமாகும் போது பொன்மனச் செம்மலின் தலையில் குட்டவும் செய்வார். அதைப் பார்த்து பாஸ்கரன் ஆனந்தப்பட்டுக் கொள்வார்.

நாராயணன் நாயருக்கும் எம். ஜி. ஆரைக் கண்டித்துக் கண்டித்துஅலுத்துப் போய் விட்டது. ஒரு நாள் எம். ஜி. ஆரைஅழைத்து, ''தினமும் உன் வேட்டி மட்டும் நிறைய அழுக்காகிறது. அதனால் இனி மேல் தரையில் உட்காரும் போது வேட்டியைத் தூக்கிக் கொண்டு தான் உட்கார வேண்டும்'' என்று கடுமையாக உத்தரவு போட்டார்.

பாஸ்கரனின் சதிச் செயலால் தான் தம்முடைய வேட்டி அழுக்காகிறது என்பது எம். ஜி. ஆருக்குத் தெரியாது அல்லவா? அவரும் பயந்து கொண்டே நாராயணன் நாயர் சொன்னது போலவே தரையில் உட்காரும் போதெல்லாம் வேட்டியைத் தூக்கிக் கொண்டே உட்காரலானார்.

ஆனால் அதைப் பார்த்து மற்ற நடிகர்கள் கொல்லென்று சிரித்துக் கேலி செய்தார்கள். அது எம். ஜி. ஆருக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

ஆயினும் நாராயணன் நாயரின் உத்திரவையும் அவரால் மீற முடியவில்லை. இந்தத் தொல்லையிலிருந்து எவ்வாறு தப்புவதென்று யோசித்தார். அவருக்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை. கடைசியில் கிருஷ்ணமூர்த்தி என்ற நடிகரிடம் யோசனை கேட்டார்.

கிருஷ்ணமூர்த்தி அவருக்கு நண்பராக விளங்கி வந்தார். அவர் வேடிக்கையான மனிதர். சிரிக்கச் சிரிக்கப் பேசி மற்றவர்களையும் சிரிக்க வைப்பார். மிகவும் குறும்புக் காரராகவும் விளங்கி வந்தார்.

அவர் எம். ஜி. ஆருக்கு ஒரு விசித்திரமான யோசனை யைக் கூறினார். அது துணிச்சலான யோசனையும் கூட. அதன்படி நடந்து கொள்வதாக எம். ஜி. ஆரும் தெரிவித்தார்.

'ரத்னாவலி' என்னும் நாடகம் ஒரு நாள் நடந்தது. இளவரசியின் தோழிகளாக சிறுவர்கள் தான் பெண் வேடமிட்டு நடிப்பது வழக்கம். எம். ஜி. ஆரும் அவ்வாறு ஒரு தோழியாக நடித்தார்.

அந்த நாடகத்தில் ஒரு காட்சி. வசந்த உற்சவத்தைக் கொண்டாடும் வகையில் தோழிகள் அனைவரும் கீழே அமர்ந்து மன்மத பூஜை செய்ய வேண்டும்.

தோழி வேடமிட்டிருந்தவர்கள் அனைவரும் அப்போது கவுன் போட்டுக் கொண்டிருந்தார்கள். மற்ற தோழிகள் சாதாரணமாகத் தரையில் உட்கார எம். ஜி. ஆர் மட்டும் வேட்டியைத் தூக்கிக் கொண்டு உட்காருவது போல் கவுனைத் தூக்கிக் கொண்டு தரையில் உட்கார்ந்தார்!

நாடகம் பார்க்க வந்திருந்தவர்கள் அதைப் பார்த்து கொல்லென்று சிரித்தார்கள். நடிகர்களுக்கும் கூட சிரிப்பு வந்தது.

காளி என். ரத்தினமும் நன்னையா பாகவதரும் அதைப் பார்த்து விட்டு கோபத்துடன் எம். ஜி. ஆரை உள்ளே வரும்படி சத்தம் போட்டார்கள். எம். ஜி. ஆரும் அமைதியாக எழுந்து உள்ளே போனுர்.

அங்கு முதலாளி சச்சிதானந்தம் பிள்ளை அளவு கடந்த ஆத்திரத்துடன் நின்று கொண்டிருந்தார். அதைப் பார்த்த கிருஷ்ணமூர்த்தி—எம். ஜி. ஆருக்குத் துணிச்சலான யோசனையைச் சொல்லிக் கொடுத்தவர் சட்டென்று பிள்ளையருகே சென்றுர்.

''முதலாளி... இந்தத் தவறை இராமச்சந்திரனுகச் செய்யவில்லை. நாராயணன் நாயர் போட்ட கடுமையான உத்தரவுதான் இதற்குக் காரணம்'' என்று மெதுவாகக் கூறினுர்.

உத்தரவா? என்ன உத்தரவு? என்று கேட்டார், சச்சிதானந்தம் பிள்ளை.

''கீழே உட்காரும்போது வேட்டியைத் தூக்கிக் கொண்டுதான் உட்கார வேண்டுமென்று நாராயணன் நாயர் உத்தரவிட்டிருக்கிறுர். அந்த பழக்கத்தில்தான் இப்போது இராமச்சந்திரன் கவுனையும் தூக்கிக் கொண்டு கீழே உட்கார்ந்திருக்கிறுன்.'' என்றுர், கிருஷ்ணமூர்த்தி.

அதைக் கேட்டதும் சச்சிதாநந்தம் பிள்ளைக்குச் சிரிப்பு வந்துவிட்டது.'' சரிசரி இனிமேல் அப்படியெல்லாம் வேட்டியைத் தூக்கிக் கொண்டு உட்கார வேண்டாம். மற்றவர்களைப் போல் சாதாரணமாகவே உட்கார்! என்று சொன்னுர்.

அப்போதிலிருந்து நாராயணன் நாயர் போட்டிருந்த கடுமையான உத்தரவு ரத்தாயிற்று. தமக்கு நல்ல யோசனை கூறிய கிருஷ்ணமூர்த்திக்கு எம். ஜி. ஆர். நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இவ்வாறு எம்.ஜி.ஆரின் நாடக வாழ்க்கையும் பரபரப்பும் நிறைந்ததாக மிக வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது.

பெரியவர் சக்ரபாணிக்கு சிறுவயதிலிருந்தே ஆங்கிலத்தில் நன்ருக எழுதவும் பேசவும் தெரியும். அந்த நாடகக் கம்பெனியில் ஆங்கிலம் நன்கு கற்ற நடிகர் அவர் ஒருவர்தான்.

அந்த நாடகக் கம்பெனியில் வாத்தியாராக இருந்த கந்தசாமி முதலியாருக்கு இது தெரியும் அதனுல் சமூக நாடகங்களில் ஆங்கிலம் பேசக்கூடிய பாத்திரம் இருந்தால் அதை பெரியவர் சக்ரபாணிக்கு கொடுத்து விடுவது வழக்கமாக இருந்தது

அதனுல் அந்த நாடகக் கம்பெனியில் பெரியவருக்கு ஒரு தனி மதிப்பு ஏற்பட்டிருந்தது. மற்ற நடிகர்களுக்கு ஆங்கில வசனம் சொல்லிக் கொடுக்க வேண்டியிருந்தால் அந்தப் பொறுப்பும் பெரியவர் சக்ரபாணியிடமே ஒப்படைக்கப்பட்டது.

அந்தக் கம்பெனியில் ராஜபார்ட் நடிகராக பி. யு. சின்னப்பா இருந்து வந்தார். அவரும் சக்ரபாணியும் நெருங்கிய நண்பர்களாகப் பழகி வந்தார்கள். அதனுல் அவர் சக்ரபாணிக்கும் எம். ஜி. ஆருக்கும் நல்ல வேடங்கள் கொடுக்குபடி சிபாரிசு செய்தார்.

ஆனுல் சக்ரபாணியிடம் ஒரு பிடிவாதக் குணம் இருந்தது. அவருக்கு நன்ருகப் பாட வரும். இருப்பினும் பாடுவதென்ருல் அவருக்கு கொஞ்சமும் பிடிக்காது. நன்ருக நடிப்பார். வசனம் பேசுவார். ஆனுல் பாட மாட்டார். அந்தப் பிடிவாதத்திற்கு ஒரு சோதனை ஏற்பட்டது.

'சந்திரகாந்தா' என்றொரு நாடகம் அதில்வரும்மடாதிபதியின் சிறையில் ஓர் ஆங்கிலப் பெண் அடைத்து வைக்கப் படுகிறாள். அது கொஞ்சம் முக்கியமான பாத்திரம். ஆங்கிலத்தில் வசனம் பேசி ஆங்கிலத்திலேயே ஒரு பாட்டும் பாடவேண்டும்.

கந்தசாமி முதலியார் அந்த வேடத்தை சக்ரபாணிக்குக் கொடுத்தார். ஆனால் காளி என். ரத்தினத்திற்கு அதில் உடன்பாடு இல்லை. சக்ரபாணியால் அந்தப் பாத்திரத்தை சரியாக நடிக்க முடியாதென்று எதிர்ப்பு தெரிவித்தார். வேறு சிலரும் அதே கருத்தைத் தெரிவித்தார்கள்.

என்றாலும் கந்தசாமி முதலியார் எதையும் பொருட் படுத்தவில்லை. சக்ரபாணியால் திறமையாக அந்தப் பாத்திரத்தில் நடிக்க முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

ஆங்கில வசனங்களைப் பேசுவதில் சக்ரபாணிக்கு சிரமம் ஒன்றுமில்லை. சரளமாகப் பேசினார். ஆனால் ஆங்கிலத்தில் பாட வேண்டுமே? அதில்தான் பிரச்னை ஏற்பட்டது.

அந்த நாடகத்திற்கான ஒத்திகை ஆரம்பமாகியது. சக்ரபாணி வசனம் மட்டுமே பேசினார். பாடவில்லை. கந்தசாமி முதலியார் எவ்வளவோ வற்புறுத்தியும் சக்ர பாணி பாட மறுத்து விட்டார்.

இவ்வாறு இரண்டு நாள் ஒத்திகையின் போதும் அவர் பாட மறுத்ததால் கந்தசாமி முதலியாரிடம் பிரம்படி வாங்க நேர்ந்தது. அப்படியும் அவருடைய பிடிவாதம் தளரவில்லை. பாடமறுத்து மௌனமாக நின்றார்.

கந்தசாமி முதலியாருக்கு எக்கச்சக்கமாகக் கோபம் வந்துவிட்டது "நாளைக்குப் பாடவில்லையென்றால் கொன்று விடுவேன்" என்று உறுமிவிட்டுச் சென்றார்.

மறுநாள் ஒத்திகைக்குச் செல்வதற்கு முன்பாக எம். ஜி. ஆர் பெரியவரிடம், ''அண்ணே... இன்று பாடி விடுங்கள். வீண் பிடிவாதம் பண்ணினுல் வாத்தியார் விளாசித் தள்ளி விடுவார். தயவு செய்து பாடிவிடுங்கள்'' என்று கெஞ்சினுர்.

ஆனுல் பெரியவர் எதுவும் சொல்லவில்லை. மௌன மாகத் தன்னருமைத் தம்பியை சிறிது நேரம் அமைதியாகப் பார்த்துவிட்டு ஒத்திகைக்குச் சென்ருர்.

பொன்மனச் செம்மலின் உள்ளம் பதறியது. தன் தமையன் அன்றும் பாடாமல் பிடிவாதம் பிடித்து வாத் தியாரிடம் செமத்தியாக உதை வாங்கிக் கட்டிக்கொள்ளப் போகிருர் என்று நினைத்தபோது அவருக்கு மிகவும் வேதனை யாக இருந்தது.

அவரும் ஒத்திகை நடைபெறுமிடத்திற்குச் சென்ருர். அங்கு வாத்தியார் கந்தசாமி ஒரு கையில் பாடநோட்டும் மறுகையில் பிரம்புமாக நின்று கொண்டிருந்தார். அவர் கோபத்தின் உச்சக் கட்டத்தில் இருக்கிருர் என்பதை அவருடைய சிவந்த விழிகள் எடுத்து க்காட்டின.

சக்ரபாணி பாடவேண்டிய பாட்டின் மெட்டை ஆர் மோனியக்காரரர் இரண்டு மூன்று முறை வாசித்துக் காட்டினுர். ஆனுல் பெரியவரோ அசையாமல் அப்படியே நின்ருர்.

வாத்தியார் கந்தசாமி முதலியார் அவரை எரித்துவிடு வதுபோல் பார்த்தார். ''கடைசி முறையாகக் கேட்கிறேன். பாடப் போகிருயா இல்லையா?'' என்று உறுமினுர்.

அந்த இடத்தில் ஒரு பயங்கர அமைதி நிலவியது. சக்ரபாணியின் கண்கள் தம்பியை நோக்கின. பொன் மனச் செம்மல் வாயால் எதுவும் பேசவில்லை. பாடி விடும் படி கண்களால் கெஞ்சினுர்.

சக்ரபாணி இரு கண்களையும் மூடிக்கொண்டார். அவர் தன்ருகப் பிரம்படி வாங்கவே தயாரர்கிருர் என்று நினைத்த போது எம். ஜி. ஆருக்கு ஒரே வெறுப்பாக இருந்தது. அந்தக் கொடூர காட்சியைக் காண விரும்பாதவர் போல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

ஆனல் மறுவிநாடி...என்ன ஆச்சரியம்! பெரியவர் கணீரென்ற குரலில் பாடுவது கேட்டது!

இளையவர் பிரமிப்புடன் விருட்டென்று திரும்பிக் பார்த்தார். பெரியவர் தான் கம்பீரமாகப் பாடிப் கொண்டிருந்தார். அதற்கேற்ப வாத்தியார் கந்தசாமி முதலியார் பிரம்பால் தம் காலிலேயே உற்சாகமாகத் தாளம் போட்டுக் கொண்டிருந்தார்.

பொன்மனச் செம்மல் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

இவ்வாறு பல சோதனைகளைச் சமாளித்து பெரியவர் சக்ரபாணியும் இளையவர் எம். ஜி. ஆரும் நாடக உலகில் முன்னேறலாஞர்கள்.

சிறிது காலத்திற்கு பிறகு அவர்கள் செல்லும் ஊர் களுக்கெல்லாம் அன்னை சத்யாவும் செல்லத் தொடங்கிஞர் ஒரு சிறிய வீடு பிடித்து அதில் தங்கிக் கொள்வார். தம் முடைய புதல்வவர்களைத் தினமும் காண்பதே அவருக்குப் பெரும் பாக்கியமாகத் தோன்றியது.

மைந்தர்கள் சோர்வடையும் போது அவர்களை உற்சாகப் படுத்துவதும் அவர்களுக்குப் பிரச்னைகள் ஏற் படும்போது சிறப்பான யோசனை வழங்குவதும் அவருடைய வேலையாக இருந்தது.

பொன்மனச் செம்மல் வளர்ந்து கட்டிளங்காளையாக மாறியபோது நாட்டில் சுதந்திர இயக்கம் மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

காந்திஜி விடுதலைப் போராட்டத்தின் தளபதியாக—அகிம்சா முறைப் போராட்டத்தின் தலைவராக விளங்கினார் அவரால் ஈர்க்கப்படாத இளைஞரே இல்லையென்று சொல்லலாம். எல்லாருடைய உள்ளத்திலும் அவர் நீக்கமற நிறைந்து நின்றார்.

நாடக உலகிலும் அவருடைய பாதிப்பு பெரிதும் காணத் தொடங்கியது. நாடகங்களுக்கு மத்தியில் தேச பக்திப் பாடல்களை உணர்ச்சிகரமாகப் பாடினார்கள்.

அவ்வாறு பாடியவர்களில் கே. பி. சுந்தராம்பாள் கிட்டப்பா, டி. கே. எஸ். சகோதரர்கள், மதுரகவி விஸ்வதாஸ், எஸ். வி. சகஸ்ரநாமம், கே. சாரங்கபாணி, பாஸ்கரதாஸ், ஜானகியம்மாள், கிருஷ்ணசாமி, பாவலர், ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

மதுரை ஒரிஜினல் பாய்ஸ்கம்பெனியின் உரிமையாளர் சச்சிதானந்தம் பிள்ளை தேசபக்தி கொண்டவர் என்று சொல்வதை விட சூழ்நிலைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர் என்று கூறலாம்.

எங்கும் தேச விடுதலையைப் பற்றித் தீவிரமாகப் போராட்டம் நடைபெறுவதைக் கவனித்ததும் அவரும் தேசபக்தி மிகுந்த 'கதர் பக்தி' என்னும் நாடகத்தை அரங்கேற்றினார்.

அதற்குக் கிடைத்த வரவேற்பு எம். ஜி. ஆரைக் பிரமிக்க வைத்து விட்டது. அவருடைய உள்ளத்தில் காந்தியடிகளும் காங்கிரசும் கதராடையும் மிக ஆழமாகப் பதிந்து விட்ட காரணத்தால் அன்றிலிருந்து அவரும் தூய கதராடை அணியவாரம்பித்தார்.

ஆனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு நேதாஜியின் முழக்கம் அவரைப்பெரிதும் கவர்ந்தது. ''ஆங்கிலேயரிடம் பேரம்பேசிப் பெறுவதல்ல சுதந்திரம். அதைப் போராடிப் பெறுவோம்'' என்ற கர்ஜனை எம். ஜி. ஆரை நேதாஜியின் பக்தராக மாற்றியது.

ஊர் ஊராகச் சென்று நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த எம். ஜி. ஆர் அந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் படியான சூழ்நிலை உருவாகியது.

உலகம் முழுவதையும் பெரும் பரபரப்பிற்குள்ளாக்கிய 'பேசும் படம்' தான் அதற்குக் காரணம். மௌனப் படங்களைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள், நடிக-நடிகையர் பேசிப் பாடி நடிப்பதைக் கண்டதும் பிரமித்துப் போனார்கள். காணாத காட்சியைக் கண்டுவிட்டது போல் குதூகலித்தார்கள்.

தமிழகத்திலும் சிலர் பேசும் படங்களைத் தயாரிக்கத் தொடங்கினார்கள். எனவே நாடக நடிகர்களின் முழுக் கவனமும் சினிமாத் துறை பக்கம் திரும்பியது. எல்லாரும் சென்னைக்குப் படையெடுத்தார்கள்.

எம். ஜி. ஆரும் பெரியவர் சக்ரபாணியும் அன்னை சத்யாவுடன் சென்னைக்கு வந்து யானைக்கவுனி பகுதியில் ஒரு சிறு வீட்டில் குடியேறினார்கள்.

மதுரை ஒரிஜினல் பாய்ஸ்கம்பெனியில் வாத்தியாராக இருந்த கந்தசாமி முதலியாரும் அவர்களுக்கு முன்பாகவே சென்னைக்கு வந்து விட்டிருந்தார். சினிமாத் துறையில் அவருக்கு நல்ல செல்வாக்கும் இருந்தது.

கதைத் தேர்வு, நடிகர்—நடிகையரைத் தேர்ந்தெடுத்தல் முதலானவற்றிற்கு அவருடைய உதவியை நாடித் தினமும் பல தயாரிப்பாளர்கள் வந்து சென்றார்கள்.

சக்ரபாணியும், எம். ஜி. ஆரும் சினிமாவில் நடிக்க சான்ஸ் கேட்டுப் பல படக்கம்பெனிகளுக்குச் சென்றாலும் தினமும் கந்தசாமி முதலியாரின் வீட்டிற்குச் சென்று தங்களை நினைவில் வைத்துக் கொண்டு சினிமாவில் நடிக்க சந்தர்ப்பம் வாங்கித் தரும்படி கேட்டுக் கொள்ளத் தவறுவதில்லை.

கந்தசாமி முதலியாருக்கும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அவருடை தீவிர முயற்சியின் காரணமாக 'சதிலீலாவதி' என்னும் படத்தில் நடிக்க எம். ஜி. ஆருக்கு வாய்ப்பு கிடைத்தது. அது இன்ஸ்பெக்டர் வேடம்.

பொன்மனச் செம்மல் முதன் முதலில் நடித்த திரைப் படம் அதுதான். 1935-ம் ஆண்டு தயாரிப்பைத் தொடங்கி 1936-ல் அதை வெளியிட்டார்கள்.

ஆனால் அதற்கடுத்து நடிக்க உடனே அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்து விடவில்லை. நீண்ட நாட்களுக்குப் பிறகே இரு சகோதரர்கள் என்னும் படத்தில் நடித்தார்.

அதைத் தொடர்ந்து மாயாமச்சேந்திரா, பிரகலாதன், சீதா ஜனனம், அசோக்குமார், தமிழறியும் பெருமாள், தாசிப்பெண் முதலான படங்களில் நடித்து முடித்தார்.

எல்லாவற்றிலும் சிறுசிறு வேடங்கள்தான் அவருக்குக் கிடைத்தன. எப்படியாவது கதாநாயகனாக நடித்துவிட வேண்டுமென்று பெரிதும் ஆவல் கொண்டார். அதற்கான முயற்சியையும் மேற்கொண்டார்.

இதற்கிடையே அவருக்குத் திருமணம் நடைபெற்றது. அவருடைய முதல் மனைவியின் பெயர் பார்கவி. அவர் அழகிலும் அறிவிலும் சிறந்தவர். அவரை அன்னை சத்யா, பெரியவர் சக்ரபாணி, அவருடைய மனைவி ஆகிய அனை வருக்குமே மிகவும் பிடித்து விட்டது.

ஆனால் அவர் எம். ஜி. ஆருடன் அதிகக் காலம் வாழ வில்லை. விதியின் கொடுமை விபரீதமாயிற்றே!

இரண்டாம் உலகப்போர் உச்சக் கட்டத்தை அடைந்த போது ஜப்பான் நாட்டு விமானங்கள் சென்னை நகரம்மீது குண்டுகளை வீசப் போகின்றனவென்று பேசிக் கொண்டார்கள்.

அதன் விளைவாக சென்னையில் வாழ்ந்து வந்த பல குடும்பங்கள் வேறு ஊர்களுக்குச் சென்றன. பெரிய வரும் பொன்மனச் செம்மலும் நன்கு யோசித்து, தாங்களிருவர் மட்டும் சென்னையில் தங்கிப் படங்களில் நடித்துக் கொண்டிருப்பதென்றும் தங்கள் மனைவிமார்களை ஊருக்கு அனுப்பி வைப்பதென்றும் முடிவு செய்தார்கள். அன்னை சத்யா தன் மைந்தர்களுடனேயே இருப்பதாகப் பிடிவாதமாகக் கூறி விட்டார்.

அதே போல் இருவருடைய மனைவிமார்களும் தங்கள் தங்கள் ஊருக்குச் சென்றார்கள். எம். ஜி. ஆரின் மனைவி பார்கவியின் தாய் வீடு பாலக்காட்டில் இருந்தது.

அங்கு சென்ற அவர் அதிக காலம் வாழவில்லை. சில மாதங்களிலேயே மாரடைப்பால் திடீரென்று உயிர் நீத்தார். அவருடைய முகத்தை இறுதியாகப் பார்க்க பொன்மனச் செம்மலுக்குக் கொடுத்து வைக்கவில்லை. அவர் போவதற்குள் அவர் மனைவியின் உடல் அடக்கம் செய்யப்பட்டு விட்டது.

பெரும் சோகத்தில் மூழ்கிப் போன அவரை அன்னை யாரும் சக்ரபாணியும் ஒருவாறு தேற்றினார்கள். அவர் மீண்டும் திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினார்.

அரிச்சந்திரா, பக்த மீரா, ஸ்ரீ முருகன், சாலிவாகனன், பைத்தியக்காரன் முதலான படங்களில் நடித்தார். ஆனால் எதிலும் கதாநாயகன் வேடமில்லை.

கதாநாயகனாக நடித்து விட வேண்டுமென்ற அவருடைய ஆர்வம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயிற்று. கடைசியில் அது நிறைவேறும் காலமும் வந்தது.

ஜீபிடர் பிக்சர்ஸ் தயாரித்த 'ராஜகுமாரி' என்னும் படத்தில் கதாநாயகனாக நடிக்க அவர் ஒப்பந்தம் செய்யப் பட்டார். அப்படத்தை இயக்கியவர் ஏ. எஸ். ஏ. சாமி.

1947-ம் ஆண்டில் தான் இந்தியா சுதந்திரமடைந்தது. அதே ஆண்டில் தான் எம். ஜி. ஆர் கதாநாயகனாக நடித்த முதல் படமும் வெளி வந்தது!

படம் பிரமாதமான வெற்றியைப் பெற்றது. அதைத் தொடர்ந்து அடுத்தடுத்து கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பு தமக்குக் கிடைக்குமென்று எம். ஜி. ஆர் எதிர் பார்த்தார்.

ஆனால் அவ்வாறு கிடைக்கவில்லை. அதற்கும் காரணம் இருந்தது!

அப்போது தமிழ்த் திரையுலகில் ஏராளமான கதாநாயகர்கள் இருந்தார்கள். ஏறத்தாழ எல்லாருமே சிறப்பானப் புகழைப் பெற்று வந்தார்கள்.

எம். கே. தியாகராஜ பாகவதர், பி. யு. சின்னப்பா, டி. ஆர். மகாலிங்கம், எம். கே. ராதா, ரஞ்சன், கே. ஆர். ராமசாமி, ஹொன்னப்பா பாகவதர், — என்று மிகப் புகழ் வாய்ந்த கதாநாயகர்கள் அப்போது திரையுலகில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு மத்தியில் எதிர் நீச்சல் போட்டு முன்னேறுவது என்பது பெரிய விஷயம். அதற்கு எம். ஜி. ஆர் தயாராக இருந்தாலும் புதுமுக நிலையில் இருந்த அவரைக் கதாநாயகனாகப் போட்டுப் படம் எடுக்கச் சட்டென்று படாதிபதிகள் முன் வந்து விடவில்லை.

இருப்பினும் பொன்மனச் செம்மல் சோர்ந்து போய் விடவில்லை. இரண்டாவது கதாநாயகன் வேடமேற்று ராஜமுக்தி, ரத்னகுமார், அபிமன்யு போன்ற படங்களில் நடித்தார்.

இந்த சமயத்தில் அன்னையாரின் வற்புறுத்தலின் பேரில் அவர் இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொண்டார். மனைவியின் பெயர் சதானந்தவதி.

ஆனால் அந்த மண வாழ்க்கையும் பொன்மனச் செம்மலுக்கு அதிக காலம் மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. அவர் மனைவி முதன் முறையாகக் கருத்தரித்த போது காசநோய் அவரைப் பிடித்துக் கொண்டது. அதன் விளைவாக அவருக்குக் கருச் சிதைவு ஏற்பட்டது.

அதன் பின் 1950-ம் ஆண்டு அவருக்கு இரண்டாவது முறையாகக் கருச் சிதைவு ஏற்பட்டது. அப்போது அவர் படுத்த படுக்கையானார். அதன் பின் அவர் எழுந்திருக்கவே இல்லை.

1949-ம் ஆண்டானது பொன்மனச் செம்மலைப் பொறுத்த வரை ஒரு முக்கியமான ஆண்டாகும். அந்த ஆண்டில் தயாரிக்கப்பட்ட 'மந்திரி குமாரி' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடிக்க அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டார். அப்படத்திற்கு கருணாநிதி கதை-வசனம் எழுதினார்.

அப்படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது பத்திரிகையில் வெளி வந்திருந்த ஒரு நடிகையின் படத்தைப் பார்த்து விட்டுப் பிரமை தட்டிப் போனார்.

ஏனென்றால் அந்த நடிகை அவருடைய முதல் மனைவி போலவே இருந்தார்!

அதன் பின் அவர் தமக்கிருந்த அலுவல்கள் காரணமாக அந்த நடிகையை மறந்து போனார். ஆனால் அதிவிரைவிலேயே அந்த நடிகையை நேரில் சந்திப்போம் என்று அவர் எதிர் பார்க்கவில்லை.

சிலமாதங்களில் 'மருத நாட்டு இளவரசி' என்னும் திரைப்படம் தயாரிக்கப்பட்டது. அதில் கதாநாயகனாக நடிக்க பொன்மனச் செம்மல் ஒப்பந்தமானார்.

தயாரிப்பாளர்கள் அவரிடம் அந்தப் படத்தின் கதா நாயகியான வி. என். ஜானகியை அவரிடம் அறிமுகம் செய்து வைத்தார்கள். தான் பத்திரிகையில் கண்டு வியந்துபோன நடிகைதான் அவர் என்பதை அறிந்தபோது அவர் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தார்.

இருவரும் நெருங்கிப் பழகினார்கள். ஒரு வரை பொருவர் புரிந்து கொண்டார்கள். வாழ்க்கையிலும் பலருடைய வேண்டுகோள், விருப்பப்படி இணைந்தார்கள்.

வி. என். ஜானகி ஓர் உத்தமமான மனைவியாகத் திகழ்ந்து வந்தார். கணவர் உடல் நலம் குன்றியிருந்த போது அருகிலேயே இருந்து பணிவிடை செய்தார். கணவர் நலமுற்றதும் அவர் செல்லுமிடங்களுக்கெல்லாம் தானும் நிழல்போல் சென்று கண்ணிமைகள் காப்பது போல் அவரைக் கவனித்து வந்தார்.

அவரைப் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளில் பார்க்கும் போதெல்லாம் 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம்' என்ற பாடல்தான் நினைவிற்கு வருகிறது.

'மருதநாட்டு இளவரசி' திரைப்படம் பெரும் வெற்றி கண்டது. அதன் பிறகு எம். ஜி. ஆர். மளமளவென்று புகழ் என்னும் ஏணியில் ஏறத் தொடங்கி விட்டார்.

அவர் நடித்த படங்கள் வசூலில் நம்ப முடியாத சாதனைகளைப் புரிந்தன. 'வசூல் மன்னன்' என்னும் சிறப்புப் பெயர் அவருக்கு அளிக்கப்பட்டது.

1949-ம் ஆண்டு திராவிட முன்னேற்ற கழகம் தொடங்கப்பட்டது. பெரியாரிடம் கொண்ட கருத்து வேறுபாடு காரணமாக திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்து அக்கட்சியை ஆரம்பித்தார், அறிஞர் அண்ணா.

அப்போது அவர் ஒருதிறமையான தலைவராகஉருவாகிக் கொண்டிருந்தார். அவருடைய அற்புதமான பேச்சாலும் எழுத்தாலும் இளைஞர்கள் பெரிதும் கவரப்பட்டார்கள். அவருடைய ஆணித்தரமான பகுத்தறிவுப் பிரச்சாரம் ஆத்திகவாதிகளைக்கூடச் சிந்திக்க வைத்து.

இந்தி வடநாட்டினரின் ஆதிக்கம் ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் திராவிடம் இனம், தமிழ் மொழி ஆகியவற்றின் சிறப்பை வெளிப்படுத்தியும் அவர் பல புரட்சிகரமான நாடகங்களை எழுதினர். அவற்றிற்குப் பிரமிப்பூட்டும் வரவேற்பு கிடைத்தது.

அப்போதுதான் அந்த அதிசயத் தலைவரைச் சந்திக்கும் வாய்ப்பு எம். ஜி. ஆருக்குக் கிடைத்தது. நடிகர் டி. வி. நாராயணசாமி 1952-ம் ஆண்டு அவரை அறிஞர் அண்ணா விடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார்.

சில முதல் சந்திப்புகள் சரித்திர முக்கியத்துவம் பெற்று விடுகின்றன. அந்த முதல் சந்திப்பையும் அப்படித் தான் சொல்ல வேண்டும்.

பொன்மனச் செம்மலைப் பார்த்ததுமே அவர்தான் தம்முடைய அரசியல் வாரிசு என்று அண்ணாவும் அண்ணாவைப் பார்த்ததும் அவர்தான் தம்முடைய ஒப்பற்ற தலைவர் என்று பொன்மனச் செம்மலும் தங்களுடைய உள்ளத்திற்குள் முடிவு செய்திருக்க வேண்டும்.

அண்ணுவால் பெரிதும் ஈர்க்கப்பட்ட எம். ஜி. ஆர் 1953-ம் ஆண்டில் திராவிட முன்னேற்ற கழகத்தில் சேர்ந்தார். கழகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியலானுர்.

திரைப்படங்களில் அவர் பேசும் வசனங்களில், பாடல் களில் தி. மு. கவின் கொள்கை இருந்தது. நூறு பத்திரி கைகள் சாதிக்க முடியாததை அவர் தம்முடைய ஒரே திரைப்படத்தின் மூலம் சாதித்தார்.

தமிழக மக்கள் தி. மு. கவின் கொள்கை என்ன, லட்சியம் யாது—என்பதைப் புரிந்து கொண்டனர். அவற்றிற்கு அமோகமாக வரவேற்பு கொடுத்தனர்.

அரசியலிலும் திரையுலகிலும் புயல் வேகத்தில் முன் னேறி சாதனைகளைப் படைத்துக் கொண்டிருந்த எம். ஜி. ஆருக்கு ஈடுசெய்ய முடியாத அதிர்ச்சியொன்றும் ஏற் பட்டது. அவருடைய அன்னை சத்யா காலமானுர். அன்னையின் விருப்பபடி, அவர் உயிர் துறந்த லாயிட்ஸ் ரோடு பங்களாவை விலைக்கு வாங்கி அதற்கு 'சத்யா இல்லம்' என்று பெயர் சூட்டினுர்.

பொன்மனச் செம்மலுக்கும் கலைஞர் கருணுநிதிக் குமிடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டதன் விளை வாக இருவரும் இணைந்து மேகலா பிக்சர்ஸ் என்னும் படக்கம்பெனியை ஆரம்பித்தார்கள். அதிலிருந்து பல வெற்றிப் படங்கள் வெளிவந்தன.

புகழ்பெற்ற பழம்பெரும் டைரக்டர் கே. சுப்பிர மணியம் பெரு முயற்சி செய்து நடிகர்களுக்காக ஒரு சங்கத்தை ஆரம்பித்தார். அதற்கு தமிழ் நடிகர் சங்கம் என்று பெயரிடப்பட்டது. ஆனுல் எம். ஜி. ஆரின் யோசனை பேரில் அதன் பெயர் 'தென்னிந்திய நடிகர்சங்கம்" என்று மாற்றப்பட்டது.

1959-ல் எம். ஜி. ஆர் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவருடைய முயற்சியால் தென்னிந்திய சங்கத்திலிருந்து 'குரல்' நடிகன் என்னும் பத்திரிகை வெளியிடப்பட்டது.

1962-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தி. மு. க முதன்முறையாகப் போட்டியிட்டது. பொன்மனச் செம்மலும் அவருடைய ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான வாலிபர்களும் அயராமல் பாடுபட்டுக் கட்சிக்காகப் பிரச்சாரம் செய்தார்கள்.

பொன்மனச் செம்மல் புயல் வேகப் பிரச்சாரத்துடன் நின்று விடவில்லை. தேர்தல் செலவுகளுக்காகப் பணத்தை வாரி வாரிக் கொடுக்கவும் செய்தார்.

தேர்தலில் 53 தி. மு. க வேட்பாளர்கள் வெற்றிபெற்று சட்டமன்றத்திற்குச் சென்றார்கள். தி. மு. க ஒரு வலுவான அரசியல் அமைப்பாக உருவாகி வருகிறது என்பதை அது எடுத்துக் காட்டியது.

அந்த வெற்றிக்கு எம். ஜி. ஆர்தான் முக்கிய காரணம் என்று அண்ணா கருதியதால் அதற்கு நன்றி செலுத்தும் வகையில் எம். ஜி. ஆரை எம். எல். சி யாக்கினார்.

எம். ஜி. ஆர் அரசியலில் தீவிரமாகப் பங்கேற்று வந்தாலும் திரைப்படங்களிலும் தொடர்ந்து நடித்துவந்தார். அவர் நடித்தபடங்கள் அனைத்துமே ரசிகர்களின் பேராதரவு பெற்றன.

1964-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிக்கான தேர்தல் நடைபெற்றது. எம். ஜி. ஆரின் கடுமையான பிரச்சாரம் தி. மு. கவிற்குப் பெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

முதன்முறையாக தி. மு. க சென்னை மாநகராட்சியின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியது.

பொன்மனச் செம்மலைப் பொறுத்தவரை 1967-ம் ஆண்டு மிகவும் சோதனையான ஆண்டாகும். அந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறவிருந்தது.

வழக்கம்போல் எம். ஜி. ஆர் ஒருமாத காலத்திற்குப் படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு மும்முரமாகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

ஜனவரி மாதம் 12-ந் தேதி நடுப்பகல் நேரம்!

ராமாவரம் தோட்டத்தில் அமைந்திருந்த எம். ஜி. ஆரின் இல்லத்திற்குச் சென்ற எம். ஆர். ராதா திடீரென்று துப்பாக்கியை எடுத்து எம். ஜி. ஆரைச் சுட்டுவிட்டுத் தானும் சுட்டுக் கொண்டார்.

இருவருமே ராயப்பேட்டை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டார்கள். சிகிச்சையளிக்க வந்த டாக்டர்களிடம் எம். ஜி. ஆர் என்னும் அற்புத மனிதர் என்ன சொன்னார் தெரியுமா?

''ராதா அண்ணன் எப்படி இருக்கிறார்? அவருக்குஆபத் தொன்றும் இல்லையே? எல்லாரும் இங்கேயே நின்று கொண் டிருந்தால் எப்படி? அவரையும் போய் கவனியுங்கள்!''

அபூர்வமாகப் பிறக்கும் அவதார புருஷர்களிடமிருந்து தான் அத்தகைய ஆபத்தான நேரத்திலும் இப்படிப்பட்ட கோரிக்கைகள் வெளிப்படும்.

எம். ஜி. ஆர் சுடப்பட்ட செய்தி தமிழக மக்களைப் பெரிதும் கலக்கிவிட்டது. அவருடைய பல்லாயிரக்கணக் கான ரசிகர்கள் ராயப்பேட்டை மருத்துவமனைக்கு ஓடிச் சென்றார்கள். தங்கள் தலைவனுக்குப் பேராபத்து ஏற்பட்டு விட்டாதோவென்று பதறினார்கள். அவருக்கு எதுவும்

நேர்ந்து விடக்கூடாது என்று இறைவனிடம் வேண்டினார்கள்.

அவருடைய உயிருக்கு ஆபத்தொன்றுமில்லையென்று டாக்டர்கள் சொன்ன பிறகுதான் அவர்களுக்கு நிம்மதி ஏற்பட்டது. அங்கிருந்து கலைந்து சென்றார்கள்.

எம். ஜி. ஆர் ஒரு மாதகாலம் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். அதற்கு முன்னால் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் நிலையிலேயே தேர்தலில் தி. மு. க விற்கு அமோகமாக வாக்களிக்கும்படி தமிழக மக்களைக் கேட்டுக் கொண்டார். அந்த வேண்டுகோள் ஆயிரமாயிரம் சுவரொட்டிகளாக அச்சிடப்பட்டு எங்கும் ஒட்டப்பட்டன.

அவரைத் தெய்வமாக நினைத்துப் போற்றி வரும் தமிழக மக்களுக்கு அது போதாதா? தங்கள் வாக்குகளை தி. மு. க. விற்கு அளித்து ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினார்கள்.

அண்ணாவின் விருப்பப்படி எம். ஜி. ஆர் பரங்கிமலை தொகுதியில் போட்டியிட்டார். அவர் தொகுதிக்கே செல்லவில்லையென்றாலும் பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தமிழக சட்ட மன்றத்திற்குள் நுழைந்த 140 எம். எல். ஏ-க்களுள் அவரும் ஒருவராக இருந்தார். அது தான் அவருடைய அரசியல் நேரடிப் பிரவேசமாகும்.

1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்றாம் தேதி அப்போது தமிழகத்தில் முதல்வராக இருந்த அண்ணா காலமானார். அடுத்த முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் போது போட்டி ஏற்பட்டது. ஆனால் எம். ஜி. ஆர் கருணாநிதியை ஆதரித்ததின் காரணமாக கருணாநிதியே

முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். கழகப் பொருளாளர் பதவியை எம். ஜி. ஆர் ஏற்றுக் கொண்டார்.

அடுத்த 1971-ம் ஆண்டு மீண்டும் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அப்போதும் தி. மு. கழகமே வெற்றி பெற்றது. கருணாநிதியே முதல்வராகப் பதவியேற்றார். எம். ஜி. ஆர் வழக்கம் போல் பரங்கிமலை தொகுதியில் நின்று அமோகமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஆரம்பத்தில் அவரும் கருணாநியும் நெருங்கிய நண்பர் களாக இருந்தாலும் பின்னால் இருவரிடையே அடிக்கடி கருந்து வேறுபாடு ஏற்படத் தொடங்கியது.

கறை படாத கைகளைக் கொண்ட பொன்மனச்செம்மல் எதிலும் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என் பதில் சிறுவயதிலிருந்தே கண்டிப்பு நிறைந்தவர்.

கழகத்தில் பல காரியங்களுக்காக செலவு செய்யப் பட்ட தொகைகளுக்கு சரியாகக் கணக்கு காட்டப்படாமல் இருந்தது. அதைக் கவனித்த எம். ஜி. ஆர் சரியான கணக்கைக் கேட்டார். அது பூதாகரமாக உருவெடுத்து விட்டது!

அவர் கணக்கு கேட்டதும் ஊழல் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னதும் கட்சி யில் பலருக்குப் பிடிக்கவில்லை. விளைவு? அக்டோபர் மாதம் பத்தாம் தேதி அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதைக் கேட்டு எம். ஜி. ஆர் ரசிகர்கள் கொதித் தெழுந்தாலும் அவர் கொஞ்சமும் பதட்டப்படவில்லை. அமைதியாக அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டார்!

அவர் தம்முடைய ரசிகர்களிடம் கலந்தாலோசித்து அக்டோபர் மாதம் பதினாறும் தேதி தனிக்கட்சி ஆரம்

பிப்பதாக அறிவித்தார். அதற்கு 'அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

அதற்கு முன்னாலும் சிலர் கழகத்திலிருந்து விலகித் தனிக்கட்சியை ஆரம்பித்திருந்தார்கள். அவையனைத்தும் சில மாதங்களில் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன.

எம். ஜி. ஆரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியும் அப்படித் தான் சில மாதங்களில் காணாமல் போய்விடுமென்று பலர் கருதினார்கள். ஆனால்...

அக்கட்சி ஆலமரமாக வளர்ந்து தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பையே கைப்பற்றி, தமிழக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து பொற்காலமொன்றை உருவாக்கப் போகிறது என்பது அப்போது அந்தக் கனவான்களுக்குத் தெரிந்திருக்கவில்லை!

1973-ம் ஆண்டு மே மாதம் இருபத்திரண்டாம் தேதி திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது. அதில் அரசியல் வித்தகர்கள் அனைவரும் பிரமித்துப் போகும் வகையில் அ. தி. மு. க. பிரம்மாண்ட மான வெற்றியைப் பெற்றது.

கருணாநிதியின் ஆட்சி ஊழல் நிறைந்தது, அது அகற்றப்பட வேண்டுமென்று பொதுக் கூட்டங்களில் முழங்கிய எம். ஜி. ஆர்., அந்த ஊழல்களைப் பட்டியல் போட்டு மத்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தார்.

அவருடையபோராட்டம் வெற்றி பெற்றதற்குஅறிகுறி யாக கருணாநிதியின் மந்திரி சபை டிஸ்மிஸ் செய்யப்பட்டது. 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் தமிழக சட்டமன்றத்திற்கான தேர்தல் நடைபெற்றது. அதில் அ. தி. மு. கழகம் 127 இடங்களில் வெற்றி பெற்றது. ஆட்சியைக் கைப்பற்றியது.

அம்முறை பொன்மனச் செம்மல் அருப்புக் கோட்டை தொகுதியில் போட்டியிட்டார். அவர் பெருவாரியான

வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுர் என்பதை மீண்டும் சொல்லத் தேவையில்லை.

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற எம். ஜி. ஆர் தமிழகத்தின் வளர்ச்சிக்கும் தமிழக மக்களின் நல்வாழ்விற்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

தமிழக மக்களின் பிரச்சனை என்னவென்பதை அவர்கள் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. அவருக்கே எல்லாம் தெரிந்திருந்தன. அவற்றைத் தீர்த்து வைக்க அவர் முழு மூச்சுடன் செயல் பட்டார்.

பல நல்ல திட்டங்கள் உருவாயின. அவற்றில் ஒன்று சத்துணவுத் திட்டமாகும். பள்ளிக்குச் செல்லும் சிறுவர்கள் பசிக் குமுறலுடன் பாடம் படிப்பது எவ்வளவு கொடுமையான விஷயம் என்பதை அவர் அனுபவ பூர்வமாக அறிந்தவராயிற்றே!

அவர்களுடைய வயிறு தினமும் ஒரு வேளையாவது நிறையட்டும், அதிலும் அந்த உணவு அவர்களுடைய உடல் ஆரோக்கியத்தை வளர்ப்பதாக இருக்கட்டுமென்பது பொன்மனச் செம்மலின் விருப்பம். இன்று தமிழகத்திலுள்ள லட்சக்கணக்கான குழந்தைகளும் தாய்மார்களும் அத்திட்டத்திற்காக அவரை வாயார வாழ்த்துகிருர்கள்.

1980-ம் ஆண்டு மறுபடியும் பொதுத் தேர்தல் நடைபெற்றது. பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ்—தி. மு. க கூட்டணி மாபெரும் வெற்றியைப் பெற்ருலும் சட்டசபைக்கான தேர்தலில் மீண்டும் அ.தி.மு கழகமே வெற்றி பெற்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தது.

தமிழக மக்களுக்காக இரவென்றும் பாராமல் பகல் என்றும் பாராமல் சேவை செய்து வந்த எம். ஜி. ஆர், திடீரென்று உடல் நலம் குன்றினுர். 7-10-84-ல் அப்பல்லோ மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

அவருடைய சிறுநீரகங்கள் பழுதடைந்துபோய் வேலை செய்யவில்லை. மாற்று சிறுநீரகங்கள் பொருத்தப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையே 14-10-84-ல் அவருடைய மூளைப் பகுதியில் ரத்தம் உறைந்ததால் அவருடைய வலதுபக்க உறுப்புக்களைப் பக்கவாதம் தாக்கியது. அவர் பேசும் சக்தியை இழந்தார்.

5-11-84 அன்று அவர் தனி விமானத்தில் அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டு புரூக்லின் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

அவருடைய உடல் நிலையில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டு வந்தாலும் தமிழகத்திலிருந்த அவருடைய எதிரிகள் பலவகையான தவறான பிரச்சாரங்களைச் செய்து வந்தார்கள்.

எம். ஜி. ஆருக்கு உடல் நலம் அபிவிருத்தியடையாது, அவர் அமெரிக்காவிலிருந்து திரும்பி வருவதே சந்தேகம் என்றெல்லாம் பேசினார்கள்.

அவர்களுடைய பொய்களை விரைவிலேயே தமிழக மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்று நினைப்பவர் போல் அவர் வெகு சீக்கிரத்தில் குணமடைந்தார்.

18-12-84 அன்று அவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது. அதன்பின் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் தமிழகத்தில் அ. தி. மு கழகமே பெரும் வெற்றியைப் பெற்றது- பாராளுமன்றத் தேர்தலில் பன்னிரண்டு இடங்களைக் கைப்பற்றியதுடன் சட்ட சபைத் தேர்தலில் 132 இடங்களைக் கைப்பற்றி வியத்தகு வெற்றியைப் பெற்றது.

எம். ஜி. ஆர். நன்கு குணமாகி 1985-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4ந்தேதி தாயகம் திரும்பினார். பரங்கி மலைத் திடலில் அவர் பொதுமக்களுக்குக் காட்சி தந்தார்.

அவரைப் பார்த்தவர்கள் பிரமிட்டும் வியட்டும் அடைந் தார்கள். இவருக்கா உடல்நலமில்லா திருந்தது? இவரா? அமெரிக்காவிற்குச் சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பி யிருக்கிறார்?

அவர்களால் நம்ப முடியவில்லை. எம். ஜி. ஆர் பொன்னைப் போல் தகதகத்தார். முன்னைக் காட்டிலும் இளமையாகவும் ஆரோக்கியமாகவும் காணப்பட்டார்.

தமிழக முதல்வராக சிகிச்சைக்குச் சென்றவர் தமிழக முதல்வராகவே திரும்பி வந்திருந்தார். அவருடைய தலைமையில் திறமை மிகு அமைச்சரவை அமைக்கப்பட்டது.

அவருக்குப் பேசுவதில் கொஞ்சம் சிரமம் இருந் தாலும் விரைவில் அவர் முன்போல் நன்றாகப் பேசுவார் என்ற நம்பிக்கை எல்லாருக்கும் இருந்தது.

தமிழக மக்களுக்கு அவர் தொண்டு செய்வதை அது எவ்வகையிலும் பாதிக்கவில்லை. அவர் முன்னைக் காட்டிலும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்.

---

செயற்கரிய சாதனைகள் புரிந்த அந்த செயல்வீரர்... தனக்காக ஒரு போதுமே வாழாத அந்த மாபெரும் இறைவன் நம்மைவிட்டு பிரிந்து விட்டார்.

உலகமே அழுதது.

கண்ணீர் அஞ்சலி செய்தது.

— 4

பெரியார் மறைந்த நாளில் மறைந்து...உலகப் பெரியாராகி விட்ட உத்தம குணம் கொண்ட உன்னத தலைவருக்காக உயிர் நீத்தோர் ஏராளம்...

ஊமையானோர்...

தங்களையே சிதைத்துக் கொண்டவர்கள் பலர்...

இந்தியாவின் எந்த ஒரு மாநில முதல் அமைச்சர் மறைவுக்கும் கிடைக்காத சிறப்பும்...அரசு மரியாதையும் நமது புரட்சித் தலைவர் ஒருவருக்கு மட்டுமே கிடைத்தது.

தேசம் முழுவதும் அன்று தேசிய விடுமுறை விட்டது.

டெல்லி தலைநகரை விட்டு நமது ஜனாதிபதியும்... துணை ஜனாதிபதியும், பிரதமரும் வெளியே வந்த வரலாறு இப்போதுதான் முதல் தடவையாக நடந்துள்ளது.

மூவரும் எம். ஜி. ஆர் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்தார்கள்.

மத்திய அமைச்சர்கள்...மாநில அமைச்சர்கள் இலங்கை அமைச்சர்கள் என்று பலர்வந்து இறுதி மரியாதை செலுத்தி வணங்கினார்கள்.

அமெரிக்க அரசும் இரங்கல் தெரிவித்தது.

வெளிநாட்டுத் தூதர்கள்...ரஷியா முதல் அனைத்து நாட்டுத் தூதர்களும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்தார்கள்.

# ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் ஆழ்ந்த அனுதாபம்

நவீன இந்தியாவின் மகத்தான தலைவர் ஒருவரை காலத்திரை மூடி விட்டது.

மக்களைக் கவர்ந்த தலைவர் எம். ஜி. ஆர் சாதாரண ஏழை எளிய மக்களுக்காகவே வாழ்ந்தார். அவருடைய வாழ்க்கை மக்களுடன் இரண்டறக் கலந்த ஒன்றாகும்.

எம். ஜி. ஆர் எப்போதும் மக்களைப் பற்றியே சிந்தித்தார். அவருடைய சிந்தனை செயல் யாவும் மக்களின் நல்வாழ்வாகவே இருந்தது.

எம். ஜி. ஆரின் மறைவு மிகப் பெரிய தேசிய இழப்பு.

# பிரதமர் ராஜீவ்காந்தி புகழ் அஞ்சலி

## சிறந்த நண்பர்

எம். ஜி. ஆர் மறைவின் மூலம் இந்த நாடு சிறந்த நண்பர்களில் ஒருவரை இழந்து விட்டது.

நாட்டின் ஒற்றுமையையும்ஒருமைப்பாட்டையும்கட்டிக் காப்பதை புனிதமான கடமையாகக் கருதினர்.

குறுகிய எண்ணங்கள் அற்ப விசுவாசம் போன்றவை களை கடந்து நின்றவர் எம். ஜி. ஆர்.

தமிழ் நாட்டு மக்களுக்கு சேவை செய்வதை இந்திய மக்களுக்குச் செய்யும் சேவையாகக் கருதினர்.

## நீதிக்கு போராடியவர்

நீதிக்காக, ஏழை எளிய மக்களின் நியாயத்துக்காக குறிப்பாக ஒதுக்கப்பட்ட தாய்க்குலத்தின் நன்மைக்காக போராட்டம் வேண்டாம் என்பது எம். ஜி. ஆரின் பெயரோடு அனைந்து விட்டவை. தனது நாவன்மையால் ஏழை மக்களின் குறைகளை வெளிப்படுத்தினார். ஏழை மக்களிடம் அவர் அன்பும், பரிவும் காட்டினார்.

## இலங்கை பிரச்னையில்

எம். ஜி. ஆரை இந்திய மக்கள் மட்டுமல்ல, இலங்கை தமிழ்மக்களும் என்றும் நினைவில் வைத்திருப்பார்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு கவுரவமும், மரியாதையும் கிடைக்க வேண்டும் என்று தொடர்ந்து போராடினார். இலங்கையில் தமிழ் மக்கள் பாதுகாப்புடன் சரிசமமாக வாழ வேண்டும் என்று விரும்பினார்..

அதே நேரத்தில் பிரச்னைகளுக்கு வன்முறை பரிகாரம் அல்ல என்றும் எம். ஜி. ஆர் வலியுறுத்தினார்.

## எனக்கு மிகப்பெரிய நஷ்டம்

எம். ஜி. ஆரின் மறைவு தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்பட்ட நஷ்டம் மிகவும் பெரியது. 2 நாட்களுக்கு முன்பு தான் என்னுடைய பாட்டனார் நேருவின் சிலையை திறந்து வைத்த போது இருவரும் சந்தித்தோம்.

ஆனால் அடுத்த 36 மணி நேரத்தில் இப்படி ஒரு அதிர்ச்சி ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை.

மறைந்த எம். ஜி. ஆரின் துணைவியாருக்கும், குடும்பத்தாருக்கும் தமிழக மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

# மகான் காஞ்சி சங்கராச்சாரியார் துயரம்

## வழிகாட்டி

முதல் அமைச்சர் எம். ஜி. ஆர் மறைவு செய்தி கேட்டு சங்கர மடம் ஆழ்ந்த வருத்தத்தையும், துயரத்தை யும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர் தனது கடைசி மூச்சு உள்ள வரை, இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருந்தார்.

## சமயப்பற்று

இது போன்ற அரசியல் வாதிகளை காண்பது மிக அரிது. அவருக்கு அமைதியான மரணம் கிடைத்து உள்ளது.

அவர் தனது இதயத்தில் உறுதியான சமயப்பற்று உடையவராக விளங்கினார்.

## சாந்தி அடையட்டும்

அன்னை மூகாம்பிகையை எப்பொழுதும் தனது இதயத்தில் வைத்துக் கொண்டு இருந்த அவருக்கு அன்னை மூகாம்பிகை, அவருடைய ஆத்மா சாந்தி அடைய நல்ல வழி காட்டட்டும்.

## ஜெயேந்திரர்

ஜெயேந்திரர் எம். ஜி. ஆர் மறைவுச் செய்தி கேட்ட தும் 'அவர் மிகவும் நல்லவர்' என்று சொல்லி கண் கலங்கினார்.

# புனிதகுரு பாலபிரஜாபதி அடிகளார் இரங்கல்

குமரி மாவட்டத்தில் சுவாமி தோப்பு திருத்தலத்தின் தலைமை குருவும் அய்யாவழி அன்புக் கொடி மக்களின் தலைவருமான புனித குரு பாலபிரஜாபதி அடிகளார் விடுத்துள்ள இரங்கல் செய்தி—

புரட்சித் தலைவர் மக்கள் தொண்டர்—ஏழைகள்பால் இரக்கம் கொண்டவர்—ஏழை மக்கள் உயர தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர். அவர் ஆத்மா சாந்தி அடைய வைகுண்ட சுவாமியின் அருள் வேண்டி பிரார்த்திக்கிறேன்.

இப்படி எல்லோரது அன்பையும் கவர்ந்த நமது புரட்சித் தலைவர் இப்போது தெய்வமாகி விட்டார்.

ராமாபுரத்து தோட்டத்து ரோசாவே......
நீ இனி யாருக்காக பூத்துக் குலுங்குவாய்!
மக்கள் அலையே...
இனி யாருக்காக ஆரவாரம் செய்வாய்?
ஜீவநதியே...
இனி யாருக்காக சிரிப்பாய்?
மணக்கும் மாலைகளே....
இனி யாருக்காக மலர்வாய்!
சிந்து பாடும் தென்றல் காற்றே......
இனி யாருக்காக வீசுவாய்!
ஏழு சுரங்களே......
நீ யாருக்காக இசைப்பாய்?
ஏழைகளுக்காக அழும் தலைவா?
இனி அழுவதற்கு யாரே உளர்?
நூறாண்டு வாழ்வு என்பது

பொய்யா!

அரசே......

அன்பே......

பண்பே......

பாசமே......

இறைவா......

**கூ**லத்தை வென்று ஞாலத்தை ஆட்சி செய்த எங்கள் அரிமா நெஞ்சன்... முத்தமிழ் தந்து மூன்று கடல் சூழ்ந்த மூவேந்தர் ஆண்ட நாட்டின் முடியுடை வேந்தன்... தோட்டா துளைத்த போதும் துவளாது தன்னைச் சார்ந் திருந்த இயக்கத்தை ஆட்சி கட்டிலில் அமர்த்தியவன்.

மீண்டும் மீண்டும் மரணப் புயல்கள் தாக்கிய போதும் மனம் தளராது என்றும் பதினாறு என்ற மகத்துவத்தில் மருத்துவம் மயங்கி நிற்க விந்தை புரிந்த சரித்திர நாயகன்...

பசிப்பிணி போக்கியவன்... பார் உள்ளவரை பழந் தமிழ் மகுடம் தந்தவன்...பஞ்சை பராரிகளை கண்ணெனக் காத்து உயர்த்தி இலவச சத்துணவு தந்தவன்... இலவச பாடநூல்... இலவசச்சீருடை.... இலவசக்காலணி... என்று எல்லாமே இலவசமாகவே தந்து தன்னையே நாட்டு மக்களுக்கு இலவசமாகத் தந்தவன்...

அன்புக்கு முதல்வன்...

அறிவுக்கு முதல்வன்...

பண்புக்கு முதல்வன்...

மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டி வாழ்ந்ததில் முதல்வன்...

முடிகொண்ட முதல்வர்களுக்கெல்லாம் முதல்வன்...

மாண்புறு மண்ணில் மைந்தனாய் தமிழுலகம் சிறக்க மாசறு மகத்துவத்தின் மங்காத ஒளி விளக்காய் திகழ்ந்த திலும் முதல்வன்...

இப்படி எல்லா வற்றிலுமே முதன்மை பெற்று முதல்வனாய் திகழ்ந்து மூன்றெழுத்து மந்திரத்தை உருவாக்கி...

எம். ஜி. ஆர். என்ற பெயரோடு வாழ்ந்த...
முக்கனியே...
மூன்று தமிழே...
முக்கடலே...
மனிதகுல மேம்பாட்டுக்காக வாழ்ந்த மும்மறையே...
எங்கள் இறையே...

இன்று உன் மறைவால் இந்த உலகமே இருள் சூழ்ந்து நிற்கின்றதே! ரத்தத்தின் ரத்தமே என்று அழைக்கும் உடன் பிறப்புகளுக் கெல்லாம் உடன் பிறப்பே... உன்னை இழந்து உய்ய வழியின்றிஉன்னை நினைத்து இந்த உலகமே அழுகின்றதே!

தமிழினத்தின் காவலனே...
அநாதைகளின் துணைவனே...
அனைவருக்கும் உறுதுணையாக நின்றவனே...
செயல் வீரனே...
பொன்னார் மேனியனே...

வங்க கடலோரம் சந்தனப் பேழையினுள் துயில் கொண்டிருக்கும் தங்கத்திரு மேனி கொண்டவனே...

நீ மீண்டும் புதுப்பிறவி எடுக்க வேண்டும்.

முப்பிறவியுடன் உன் சாதனைமுடியாமல் நான்காவது பிறவியும் எடுத்து தமிழ் மண்ணைக் குளிர்விக்கும் கருணை மழையாய் வரவேண்டும்.

இறைவா...
எங்கள் இதயதெய்வமே...
மீண்டும் வருக...
மக்களுக்கு நல்வாழ்வு தருக!

வாழ்க புரட்சித்தலைவர்—பொன்மனச் செம்மல்—முதல்வர் எம். ஜி. ஆர். புகழ்! வெல்க புரட்சித் தலைவர் சகாப்தம்!

முற்றும்

